بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7 — இதழ் 9

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

29 ரஜப் 1443 ஹிஜ்ரி கமரி 03 அமான் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 03 மார்ச் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَمَا الۡحَیٰوۃُ الدُّنۡیَاۤ اِلَّا لَعِبٌ وَّلَہۡوٌ ؕ وَلَلدَّارُ الۡاٰخِرَۃُ خَیۡرٌ لِّلَّذِیۡنَ یَتَّقُوۡنَ ؕ اَفَلَا تَعۡقِلُوۡنَ

உலக வாழ்க்கை விளையாட்டும், பொழுது போக்குமேயன்றி வேறில்லை. ஆனால் இறையச்சம் உடையவர்களுக்கு நிச்சயமாக மறுமை வீடே சிறந்தது. எனவே நீங்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டாமா?(6:33)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவனின் மகத்துவம், கம்பீரம் மற்றும் பரிசுத்தத்திற்காக எவர்கள் உத்வேகம் கொள்வதில்லையோ அவர்களின் தொழுகைகள் பொய்யானவை ஆகும். அவர்களின் சஜ்தாக்கள் வீணானவை ஆகும். இறைவனுக்காக உத்வேகம் கொள்ளாதவரை அந்த சஜ்தாக்கள் வெறும் மந்திரங்களாக மட்டுமே இருக்கும். அதன் மூலம் அவர் சொர்க்கத்தை பெற விரும்புகின்றார். உங்களின் குர்பானியின் இறைச்சி இறைவனை சென்றடைவதில்லை என்று கூறப்பட்டிருப்பதைப் போன்று உங்களது ருகூவும், சஜ்தாக்களும் உண்மையானதாக இல்லாத வரை இறைவனை சென்றடைவதில்லை**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இறைவனின் மகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட விருப்பம் கொள்ளுதல்

எவருக்கு இந்த உத்வேகம் கிடைத்து விடுமோ அவரே அல்லாஹ்வின் பார்வையில் இறைநேசராகவும், அருளுக்குரியவராகவும் இருப்பார். தனது கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான். தொழுகைகளில் سُبۡحَانَ رَبِّیَ الۡعَظِیۡمِ اور سُبۡحَانَ رَبِّیَ الۡاَعۡلٰی என்று கூறப்படுகின்றது. இதுவும் கூட இறைவனின் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்பதன் விருப்பம் ஆகும். இறைவனின் மகத்துவம் எப்படிப்பட்டதென்றால் அதற்கு நிகரே கிடையாது. தொழுகைகளில் தஸ்பீஹ் மற்றும் தக்தீஸ் செய்யும்போது இந்த நிலையே வெளிப்படுகின்றது. அதாவது இயற்கையான உத்வேகத்துடன் தனது பணிகளிலும், முயற்சிகளிலும் மனிதன் இதனை வெளிப்படுத்த வேண்டும். அதாவது இறைவனின் மகத்துவத்திற்கு எதிராக எந்தவொரு விஷயமும் தன் மீது மேலோங்கி விட முடியாது என்ற நிலையை வெளிப்படுத்த வேண்டும். இது பெரும் இறைவணக்கம் ஆகும். இறைவனின் விருப்பத்திற்கேற்ப எவர் உத்வேகம் கொண்டுள்ளாரோ அவரே இறை உதவி பெற்றவர் என்று அழைக்கப்படுகின்றார். மேலும் அவரே அருட்களைப் பெறுகின்றார். இறைவனின் மகத்துவம், கம்பீரம் மற்றும் பரிசுத்தத்திற்காக எவர் உத்வேகம் கொள்வதில்லையோ அவர்களின் தொழுகைகள் பொய்யானவை ஆகும். அவர்களின் சஜ்தாக்கள்

(தொடர்ச்சி 10 வது பக்கம்...)

**மறுமையை நிராகரிப்பதன் காரணமாக கவனமின்மை உருவாகின்றது. மேலும் உள்ளம் அறிவை இழந்து விடுகின்றது. இதன் காரணமாக மனிதன் வெளிப்படையான மற்றும் உறுதியான விஷயத்தைக் கூட துணிச்சலுடன் நிராகரிக்கின்றான். சீர்தூக்கிப் பார்ப்பதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை**

فَالَّذِیۡنَ لَا یُؤۡمِنُوۡنَ بِالۡاٰخِرَۃِ قُلُوۡبُہُمۡ مُّنۡکِرَۃٌ وَّہُمۡ مُّسۡتَکۡبِرُوۡنَ (16:23)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா அன்–நஹலின் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறைவன் ஏகனாக இருப்பது அவ்வளவு உறுதியான விஷயம் என்றால், பின்னர் மக்கள் ஏன் ஏக இறைவனை நிராகரிக்கின்றார்கள்? என்ற கேள்விக்கான பதில் இந்த சொற்றொடரில் வழங்கப்பட்டுள்ளது. அந்த பதில் இதுவாகும். அந்த நிராகரிப்பு எந்த சான்றையும் அடிப்படையாக கொண்டிருப்பதில்லை. மாறாக, சான்றுகள் இல்லாத போது இணை வைத்தலில் மூழ்கி இருப்பதன் காரணம் என்னவென்றால், இந்த மக்கள் மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கையை நிராகரிக்கின்றனர். மேலும் அந்த நிராகரிப்பின் காரணமாக அவர்களிடம் பக்குவம் எஞ்சியிருப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் தமது செயல்களுக்கு எந்த விளைவும் கிடையாது என்று கருதும்போது அவை நல்லதா? கெட்டதா? என்பது குறித்து அவர்களிடம் எந்தக் கவலையும் உருவாகுவதில்லை. பிடிவாதம் மற்றும் பகைமையில் எந்த தவறையும் உணர்வதில்லை. ஏனென்றால் அவர்களின் பார்வையில் அதன் காரணமாக பிடிபட மாட்டோம் என்ற எண்ணம் உள்ளது.

எனவே கொஞ்சம் கொஞ்சமாக அவர்களின் உள்ளம் அறிவீனமானதாகவும் முட்டாள்தனம் கொண்டதாவும் ஆகி விடுகின்றது. புரியும் தன்மையும், நேர்வழிக்கான உணர்வும் அவர்களிடம் எஞ்சியிருப்பதில்லை. இன்னும் கூறப்போனால், எனது செயல்களுக்கு ஒரு முக்கிய விளைவு வெளிப்பட இருக்கின்றது என்று அவர் உணரும் போதுதான் அவரிடம் நல்லொழுக்கம் உருவாகும்.

(தொடர்ச்சி 10 வது பக்கம்...)

## நபிமொழி

**மக்கா, மதீனாவில் தஜ்ஜால் நுழைய மாட்டான்**

1879: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மஸீஹுத் தஜ்ஜாலின் ஆதிக்கம் மதீனாவிற்குள் நுழையாது. அன்றைய தினம் மதீனாவுக்கு ஏழு வாசல்கள் இருக்கும். ஒவ்வொரு வாசலிலும் இரண்டு வானவர்கள் இருப்பார்கள்.

1880: ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மதீனாவின் வாசல்களில் வானவர்கள் இருப்பர். பிளேக் நோயும், தஜ்ஜாலும் அதில் நுழையாது.

1881: ஹஸ்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்கா, மதீனாவைத் தவிர தஜ்ஜால் அழிக்காத எந்த நகரமும் இராது. அதன் எந்தவொரு வாசலானாலும் அங்கே அணிவகுத்து அதை பாதுகாக்கும் வானவர்கள் இருப்பார்கள். பின்னர் மதீனா, தன் குடிமக்களுடன் மூன்று முறை குலுங்கும். அப்போது ஒவ்வொரு நிராகரிப்பாளரையும், நயவஞ்சகரையும் அல்லாஹ் (போருக்காக) வெளியேற்றி விடுவான். (சஹீஹ் புகாரி தொகுதி 3, கிதாப் ஃபஸாயிலுல் மதீனா – 2008 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 28 ஜனவரி 2022 (முழுவதுமாக)*

*ஹுஸூர் அவர்களுடன் கேம்பியா குத்தாமுல் அஹ்மதிய்யா செயற்குழுவின் ஆன்லைன் சந்திப்பு*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**நாம் நிராகரிப்பாளர்களின் சவாலை ஏற்றுக் கொண்டு அந்த சந்தர்ப்பத்தில் புறப்படுவதாக வாக்குறுதி செய்து விட்டோம். எனவே நாம் அதிலிருந்து பின்வாங்க முடியாது. எனக்கு தனியாக செல்ல நேரிட்டாலும் நான் செல்வேன். மேலும் எதிரிக்கு எதிரில் நான் தனியாக நிற்பேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**

**பனூ நளீர் போர் பத்ருல் மவ்அத், பனூ முஸ்தலிக் போர், இஃப்க் சம்பவம் மற்றும் அஹ்ஸாப் போர் பற்றிய குறிப்புகள்**

**மதிப்பிற்குரிய முக்தார் அஹ்மது கோந்தல் சாஹிபின் மனைவி மதிப்பிற்குரிய முபாரக்கா பேகம் சாஹிபா, மதிப்பிற்குரிய அப்துல் வஹீத் சாஹிப், அமெரிக்காவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய செய்யது வகார் அஹ்மது சாஹிப் ஆகிய மர்ஹூம்களின் நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 ஜனவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **28 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் நற்குறிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இன்றும் அதுவே நடைபெறும். ஹம்ராவுல் அஸது போர் குறித்து வரலாற்று நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சனிக்கிழமை அன்று உஹது மலையிலிருந்து திரும்பி வந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை ஃபஜ்ர் வேளை ஆனபோது ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு கொடுத்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகைக்காக அமர்ந்து கொண்டு காத்திருக்கத் தொடங்கினார்கள். இதற்கிடையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அவ்ஃப் முஸன்னி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தேடிக் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தபோது எழுந்து நின்று அன்னார் (ஸல்) அவர்களிடம் இந்த செய்தியை கூறினார்கள். அதாவது அன்னார் வீட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தபோது அன்னார் மலல் என்ற இடத்தில் இருந்தார்கள். அங்கு குரைஷிகள் முகாமிட்டுள்ளார்கள் என்ற செய்தியை கூறினர். மலல் என்பது மக்காவின் வெளிப்பாதையில் மதீனாவிலிருந்து 18 மைல் தொலைவிலுள்ள ஓர் இடத்தின் பெயராகும். நீங்கள் ஒன்றும் செய்யவில்லை. நீங்கள் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளீர்கள். அதாவது முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. துன்பம் கொடுத்துள்ளீர்கள். ஆனால் நீங்கள் அவர்களை விட்டு விட்டீர்கள். அவர்களை அழிக்கவில்லை என்று அபுசுஃப்யான் மற்றும் அவரது தோழர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்ததை அன்னார் செவியுள்ளார்கள்.

முஸ்லிம்களில் இன்னும் பெரும் பெரும் தலைவர்கள் எஞ்சியுள்ளனர். அவர்கள் உங்களுக்கெதிராக ஒன்றுகூடி விடுவார்கள் என்று நிராகரிப்பாளர்கள் கூறினர். எனவே வாருங்கள் திரும்பிச் செல்வோம். நாம் அவர்களில் எஞ்சியுள்ள மக்களை வேரோடு பிடுங்கி எறிந்து விடுவோம். அப்போது சஃப்வான் பின் உமைய்யா, அந்த மக்களை இந்த விஷயத்திலிருந்து தடுத்தான். அதாவது அவன் காஃபிர்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தான். அவன் அவர்களை தடுத்தான். மேலும் எனது சமுதாயமே! அவ்வாறு செய்ய வேண்டாம். ஏனென்றால் அந்த மக்கள் போர் செய்து விட்டனர். மேலும் எந்த மக்கள் போருக்கு வருவதிலிருந்து பின்தங்கி இருந்தார்களோ தற்போது அவர்களும் உங்களுக்கெதிராக அவர்களுடன் இணைந்து விடுவார்கள். எனவே திரும்பிச் செல்லுங்கள். ஏனென்றால் வெற்றி உங்களுடையதாக உள்ளது. மேலும் நீங்கள் திரும்பிச் சென்றால் நீங்கள் தோற்று விடுவீர்கள் என்ற அச்சம் எனக்கு உள்ளது என்று கூறினான்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்களிடம் முஸம்மி சஹாபியின் அந்த விஷயத்தை கூறினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நமது பிள்ளைகள் மீது அவர்கள் போர் தொடுக்காமல் இருப்பதற்காக நாம் எதிரியை நோக்கி செல்வோம் என்று அந்த இருவரும் கூறினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஃபஜர் தொழுகையை முடித்த பிறகு மக்களை அழைத்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், எதிரிகளுக்கெதிராக புறப்படுங்கள் என்றும், கடந்த நாளில் போரில் கலந்து கொண்டவரே நம்முடன் புறப்படுவார் என்றும் இறைவனின் தூதர் உங்களுக்கு கட்டளை வழங்குகின்றார் என்றும் அறிவிப்பு செய்யும்படி கூறினார்கள். அதாவது உஹது போரில் கலந்து கொண்டவரே இப்போது புறப்படுவார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடந்த நாள் முதல் கட்டப்படிருந்த தமது கொடியை கொண்டு வரச் செய்தார்கள். அது இன்னும் திறக்கப்படாமல் இருந்தது. அந்தக் கொடியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு கொடுத்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு கொடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

(சபலுல் ஹுதா தொகுதி 4 பக்கம் 309 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 5 பக்கம் 225 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களின் இந்தக் குழு மதீனாவிலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள ஹம்ராவுல் அஸது என்ற இடத்தை அடைந்தது. அப்போது இணை வைப்பவர்கள் அச்சமடைந்தனர். மேலும் மதீனாவை நோக்கி திரும்பிச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டு விட்டு மக்காவிற்கு திரும்பிச் சென்றனர்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 113)

ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டில் பனூ நளீர் போர் நடைபெற்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளின் ஒரு சிறு கூட்டத்தினருடன் பனூ நளீர் கோத்திரத்திடம் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு ஏன் சென்றார்கள்? என்பது குறித்து பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. ஓர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பனூ ஆமிர் கோத்திரத்தின் 2 கொலையுண்டவர்களின் ஈட்டுத் தொகையை வசூல் செய்வதற்காக சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சுமார் 10 சஹாபிகள் இருந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி) ஆகியோரும் இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு சென்றடைந்து அவர்களிடம் தொகையைக் குறித்து பேசியபோது அபுல் காஸிமே! நீங்கள் முதலில் உணவு உண்ணுங்கள். பின்னர் உங்களது பணியைப் பற்றி பேசலாம் என்று யூதர்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சுவற்றிற்கு அருகே அமர்ந்திருந்தார்கள்.

யூதர்கள் தங்களுக்குள் சதித்திட்டம் தீட்டினர். மேலும் இந்த நபரை அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு இதை விட சிறந்த சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைக்க முடியாது என்று கூறினர். எனவே இந்த வீட்டின் மீது ஏறி ஒரு பெரிய கல்லை அவர் மீது யார் வீசுவார்? என்பதைக் கூறுங்கள். ஏனென்றால் அதன் மூலம் நமக்கு இவரிடமிருந்து இரட்சிப்பு கிடைத்து விடும் என்று கூறினர். அப்போது அம்ர்

பின் ஜஹ்ஹாஷ் என்ற யூதர்களின் ஒரு தலைவன் அந்த கருத்துக்கு அதரவு அளித்தான். மேலும் நான் இந்தப் பணிக்காக தயாராக இருக்கின்றேன் என்று கூறினான். ஆனால் அப்போதே ஸல்லாம் பின் மிஷ்கம் என்ற பெயர் கொண்ட மற்றொரு யூத தலைவர் இந்த எண்ணத்தை எதிர்த்தார். மேலும் இந்த செயலை ஒருபோதும் செய்யாதீர்கள். இறைவன் மீது ஆணையாக! நீங்கள் எதனைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கின்றீர்களோ அதைக் குறித்து நிச்சயம் சுயமாக அவருக்கு செய்தி கிடைத்து விடும். இந்த விஷயம் உடன்படிக்கை மீறுதலாகும். ஏனென்றால் நமக்கும், அவர்களுக்கும் மத்தியில் உடன்படிக்கை உள்ளது என்று கூறினார். பின்னர் அந்த நபர் மேலே சென்றடைந்தார். அதாவது கல்லைப் போடக் கூடியவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கல்லைப் போடுவதற்காக அவர் வீட்டின் மாடிக்கு சென்றார். அப்போது விண்ணிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அந்த சதித்திட்டம் குறித்து செய்தி வந்தது.

யூதர்கள் என்ன செய்ய இருக்கின்றார்கள்? என்பதை அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எச்சரிக்கை செய்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக தமது இடத்திலிருந்து எழுந்தார்கள். மேலும் தனது நண்பர்களை அங்கு அமர்த்தி விட்டு அன்னார் (ஸல்) அவர்கள் ஏதோ ஒரு பணிக்கு புறப்பட்டு செல்வதைப் போன்று சென்று விட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் விரைவாக மதீனா திரும்பிச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா சென்றடைந்த பிறகு ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களை பனூ நளீர் கோத்திரத்திடம் அனுப்பி வைத்தார்கள். மேலும் எனது நகரம் அதாவது மதீனாவிலிருந்து வெளியேறி விடுங்கள். தற்போது நீங்கள் எனது நகரத்தில் வசிக்க முடியாது. மேலும் நீங்கள் தீட்டிய சதித்திட்டம் நம்பிக்கை துரோகம் ஆகும் என்ற தூதுச் செய்தியை அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களுக்கு 10 நாட்கள் காலக்கெடு வழங்கி இருந்தார்கள். ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள். மேலும் நாங்கள் எங்களது நாட்டை விட்டு ஒருபோதும் செல்ல மாட்டோம் என்று கூறினார்கள்.

இந்த தூதுச் செய்தியை கேட்டபோது முஸ்லிம்கள் போருக்காக தயாரானார்கள். அனைத்து முஸ்லிம்களும் ஒன்றுகூடியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ நளீருக்கு எதிராக போரிட புறப்பட்டார்கள். போர்க் கொடி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களின் கோட்டைகளை முற்றுகையிட்டார்கள். யூதர்களின் உதவிக்காக எவரும் வரவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ நளீருக்கு எதிராக படையெடுத்தார்கள். இஷா நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது 10 நபித்தோழர்களுடன் தனது வீட்டிற்கு வருகை தந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் அறிவிப்பிற்கேற்ப இஸ்லாமிய படையின் தலைமைப் பொறுப்பை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்கள். ஆனால் மற்றோர் அறிவிப்பிற்கேற்ப அந்த நற்பேறு ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு கிடைத்தது.

மற்றொரு பக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகக் கடுமையுடன் அவர்களை முற்றுகையிட்டிருந்தார்கள். அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் அதாவது யூதர்களின் உள்ளங்களில் முஸ்லிம்களைக் குறித்த அச்சத்தை உருவாக்கினான். இறுதியில் எங்களை இந்த நிபந்தனையுடன் நாட்டை விட்டு செல்வதற்கு அனுமதி நல்க வேண்டும் என்று யூதர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் விண்ணப்பித்தனர். மேலும் ஆயுதங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்தையும் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்கும்படியும் கேட்டார்கள். மேலும் தங்களை உயிருடன் விட்டு விட வேண்டும். ஒட்டகங்களில் சுமந்து செல்லக் கூடிய பொருட்களை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்று வேண்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் இந்த நிபந்தனை மற்றும் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

ஓர் அறிவிப்பின்படி அன்னார் (ஸல்) அவர்கள் 15 நாட்கள் வரை அவர்களை முற்றுகையிட்டிருந்தார்கள். அதேநேரம் சில அறிவிப்புகளின்படி நாட்களின் எண்ணிக்கைகளில் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது.

(அஸீரத்துன் ஹலபியா தொகுதி 2 பக்கம் 357–361 கஸ்வா பனூ நளீர் – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார் சகோதரர்களின் அனுமதியுடன் பனூ நளீர் போரிலிருந்து கிடைத்த அனைத்துப் போர் செல்வங்களையும் முஹாஜிர்களுக்கு மத்தியில் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள். அப்போது அன்ஸார் கூட்டத்தினரே! அல்லாஹ் உங்களுக்கு நற்கூலியை வழங்குவானாக என்று ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(சபலுல் ஹுதா தொகுதி 4 பக்கம் 325 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ருல் மஃவத் போர் ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்தப் போருக்கான காரணம் இதுவாகும். அதாவது அபுசுஃப்யான் பின் ஹரப் உஹது போரிலிருந்து திரும்பிச் செல்லும்போது அடுத்த வருடம் பத்ருஸ் ஸஃப்ரா என்ற இடத்தில் நாங்களும், நீங்களும் சந்திப்போம் என்று உரத்த குரலில் கூறினான். அங்கு நாம் போரிடுவோம். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களிடம், இன்ஷா அல்லாஹ் என்று கூறும்படி கூறினார்கள்.

இந்த விஷயத்தில் மக்கள் பிரிந்து சென்றனர். குரைஷிகள் திரும்பி விட்டனர். அவர்கள் இந்த வாக்குறுதியைக் குறித்து தமது மக்களிடம் கூறி விட்டனர். மக்கா மற்றும் மதீனாவிற்கு மத்தியில் ஒரு பிரபலமான பத்ர் என்ற கிணறு உள்ளது. அது ஸஃப்ரா பள்ளத்தாக்கு மற்றும் ஜார் என்ற இடத்திற்கு மத்தியில் அமைந்துள்ளது. மதீனாவின் தென்மேற்கில் 150 கிலோ மீட்டர் தொலைவில் பத்ர் என்ற இடம் அமைந்துள்ளது. அறியாமைக் காலத்தில் அந்த இடத்தில் ஒவ்வொரு வருடமும் துல்கஃதா முதல் தேதியிலிருந்து எட்டாம் தேதி வரை ஒரு பெரிய திருவிழா நடைபெற்று வந்தது.

எவ்வாறிருப்பினும் வாக்குறுதிக்கான நேரம் அருகில் வந்தது. அபூசுஃப்யான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்கொள்ள செல்வதை வெறுத்து வந்தார். அவருக்கு அச்சம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அந்த நிச்சயிக்கப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திக்கவே கூடாது என்பதையே விரும்பி வந்தார். அவர் ஒரு பெரும் படையை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றார் என்பதை அபூசுஃப்யான் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். அவர் ஒரு பெரும் படையை ஒன்றுகூட்டி இருக்கின்றார் என்ற செய்தி மதீனாவாசிகளுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்து கொண்டிருந்தார். முஸ்லிம்கள் இதனால் அச்சத்திற்குள்ளாகி விட வேண்டும் என்பதற்காக அரேபியாவின் மூலை முடுக்குகளில் இந்த செய்தி பரவி விட வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்தார்.

(சபலுல் ஹுதா தொகுதி 4 பக்கம் 337 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தனது மார்க்கத்தை வெற்றி பெறச் செய்வான். மேலும் தனது தூதர் (ஸல்) அவர்களுக்கு கண்ணியம் வழங்குவான். நாம் சமுதாயத்திடம் வாக்குறுதி செய்தோம். அதற்கு மாற்றம் செய்வதை நாம் விரும்பவில்லை. அவர்கள் அதாவது நிராகரிப்பாளர்கள் அதனை கோழைத்தனமாக கருதுவார்கள். தாங்கள் (ஸல்) அவர்கள் வாக்குறுதிக்கேற்ப செல்லுங்கள். இறைவன் மீது ஆணையாக! இதில் நிச்சயம் நன்மை உள்ளது என்று கூறினர். இந்த உணர்வுகளை கேட்டு விட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அபூசுஃப்யான் போன்றோரின் படைக்கான தயாரிப்புகளைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு செய்தி கிடைத்திருந்தது. எனவே அன்னார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை தமக்குப் பிறகு மதீனாவின் அமீராக நியமித்தார்கள்.

ஓர் அறிவிப்பின்படி அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் பின் அபீ பின் சுலூலை அமீராக நியமித்தார்கள். மேலும் தனது கொடியை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். மேலும் முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு பத்ர் மைதானத்தை நோக்கி புறப்பட்டு விட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்களுடன் 1500 முஸ்லிம்கள் இருந்தனர். முஸ்லிம்கள் பத்ர் மைதானத்தில் நடைபெற்ற திருவிழாவில் பொருட்களை வாங்கி விற்றனர். மேலும் வியாபாரத்தில் பெரும் லாபத்தை

சம்பாதித்தனர். 8 நாட்கள் தங்கியிருந்த பிறகு மதீனாவிற்கு திரும்பி வந்து விட்டார்கள்.

(சபலுல் ஹுதா தொகுதி 4 பக்கம் 337 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 46 – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அந்த இடத்தில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் மூலம் முஸ்லிம்களுக்கு பெரும் பயன் கிடைத்தது. உஹது போரில் அபூசுஃப்யான் அடுத்த வருடம் மீண்டும் முஸ்லிம்களை சந்திப்பதாக சவால் விடுத்திருந்தார். அது குறித்து மேலும் விளக்கம் இவ்வாறு கிடைக்கின்றது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: உஹது போருக்குப் பிறகு மைதானத்திலிருந்து திரும்பும்போது அபூசுஃப்யான் முஸ்லிம்களிடம் இவ்வாறு சவால் விடுத்திருந்தார். அதாவது அடுத்த வருடம் பத்ர் என்ற இடத்தில் எங்களுக்கும், உங்களுக்கும் போர் நடக்கும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த சவாலை ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருந்தார்கள். எனவே அடுத்த வருடம் அதாவது ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதத்தின் இறுதி நாட்கள் வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1500 சஹாபிகளை ஒன்றுகூட்டி அவர்களை அழைத்துக் கொண்டு மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் பின் அபீயை அமீராக நியமனம் செய்தார்கள்.

மற்றொரு பக்கம் அபூசுஃப்யான் பின் ஹரபும் 2000 பேர் கொண்ட குரைஷிய படையுடன் மக்காவிலிருந்து புறப்பட்டார். ஆனால் உஹது வெற்றி மற்றும் இவ்வளவு பெரிய படை இருந்தபோதிலும் அவரது உள்ளம் அச்சத்திற்குள்ளாகி இருந்தது. மேலும் இஸ்லாத்திற்கு பாதிப்புகள் ஏற்பட்டிருந்தபோதிலும் ஒரு பெரும் படைக்கான ஏற்பாடு ஆகிவிடாத வரை முஸ்லிம்களுக்கு எதிரில் நிற்க வேண்டாம் என்பதையே அவர் விரும்பி வந்தார். எனவே இன்னும் அவர் மக்காவிலேயே இருந்தார். அப்போது முஅய்ம் என்ற பெயரைக் கொண்ட எந்த கோத்திரத்தையும் சார்ந்திராத ஒரு நபரை அவர் மதீனாவை நோக்கி அனுப்பி வைத்தார். மேலும் முடிந்த அளவிற்கு முஸ்லிம்களை அச்சமூட்டி எச்சரித்து பொய்களை பேசி போரிலிருந்து விலக்கி வைக்கும்படி அவரை வலியுறுத்தி இருந்தார். எனவே அந்த நபர் மதீனாவிற்கு சென்றார். குரைஷிகளின் தயாரிப்புகள், ஆற்றல் மற்றும் அவர்களின் உணர்வுகள் தொடர்பான பொய்யான சம்பவங்களை எடுத்துரைத்து எடுத்துரைத்து மதீனாவில் ஒரு நிம்மதியற்ற நிலையை அவன் உருவாக்கி இருந்தான். எந்த அளவுக்கென்றால் பலவீனமான இயல்பு கொண்ட மக்கள் அந்தப் போரில் கலந்து கொள்வதிலிருந்து அச்சத்திற்குள்ளாகி விட்டனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறப்படுவதற்கு வழிகாட்டினார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் தமது சொற்பொழிவில் நாம் நிராகரிப்பாளர்களின் சவாலை ஏற்றுக் கொண்டு அந்த சந்தர்ப்பத்தில் புறப்படுவதாக வாக்குறுதி செய்து விட்டோம். எனவே நாம் அதிலிருந்து பின்வாங்க முடியாது. எனக்கு தனியாக செல்ல நேரிட்டாலும் நான் செல்வேன். மேலும் எதிரிக்கு எதிரில் தனியாக நிற்பேன் என்று கூறியபோது மக்களின் அச்சம் அகன்று விட்டது. அவர்கள் பெரும் உணர்வுடனும், தூய்மையுடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் புறப்படுவதற்கு தயாராகி விட்டார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1500 சஹாபிகளுடன் மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். மற்றொரு பக்கம் அபூசுஃப்யான் தனது 2000 போர் வீரர்களுடன் மக்காவிலிருந்து புறப்பட்டார். ஆனால் இறைவனின் வல்லமை எப்படி வெளிப்பட்டதென்றால் முஸ்லிம்கள் பத்ர் மைதானத்திற்கு தங்களது வாக்குறுதிக்கேற்ப வந்தடைந்து விட்டனர். ஆனால் குரைஷிகளின் படை சிறிது தூரம் வந்து மீண்டும் மக்காவிற்கு திரும்பிச் சென்று விட்டது.

அதில் நடைபெற்ற சம்பவம் இவ்வாறாகும். அதாவது முஅய்யிம் என்ற நபரின் தோல்வி குறித்து அபூசுஃப்யானிற்கு செய்தி கிடைத்தபோது அவர் உள்ளத்தால் அச்சமடைந்தார். மேலும் தமது படைக்கு இந்த அறிவுரையை செய்தவாறு வழிப்பாதையிலிருந்து அவர்களை திரும்ப அழைத்துச் சென்று விட்டார். இந்த வருடம் மிகவும் வறட்சி உள்ளது. மக்கள் வறுமையில் உள்ளனர். எனவே இந்த வருடம் போரிடுவது சரியாக இருக்காது என்று கூறி சென்று விட்டார். செழிப்பு ஏற்படும்போது அதிக தயாரிப்புடன் மதீனாவின் மீது நாம் தாக்குதல் தொடுப்போம் என்று கூறினார். இஸ்லாமிய படை 8 நாட்கள் வரை பத்ர் எனும் இடத்தில் தங்கியது. அங்கு துல்கஃதா மாதத்தின் ஆரம்பத்தில் ஒவ்வொரு வருடமும் திருவிழா நடைபெற்று வந்தது. (இதைக் குறித்து ஏற்கனவே கூறப்பட்டு விட்டது). எனவே அந்த நாட்களில் சஹாபிகள் அந்த திருவிழாவில் வியாபாரம் செய்து அதிக லாபம் சம்பாதித்தனர். எந்த அளவுக்கென்றால் அந்த 8 நாள் வியாபாரத்தில் அவர்கள் தங்களது முதலீட்டை இரண்டு மடங்காக ஆக்கிக் கொண்டனர். திருவிழா முடிவடைந்த பிறகும் குரைஷிய படைகள் திரும்பி வராதபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்திலிருந்து இடம் பெயர்ந்து மதீனாவிற்கு திரும்பி வருகை தந்து விட்டார்கள். மேலும் குரைஷிகள் மக்காவிற்கு திரும்பிச் சென்று மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு தயாரிப்புகளை செய்யத் தொடங்கினர். இந்த சம்பவம் பத்ருல் மவ்அத் என்று அழைக்கப்படுகின்றது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 529,530)

பனூ முஸ்தலிக் போரானது ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ஷஃபான் மாதத்தில் நிகழ்ந்தது. பனூ முஸ்தலிக் போரின் இரண்டாவது பெயர் முரைஸிஹ் என்பதாகும்.

(கிதாபுல் மகாஸி லில்வாகிதி தொகுதி 1 பக்கம் 341 – 2013 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பனூ முஸ்தலிக் கோத்திரம் குஸாஆ கோத்திரத்தின் கிளையாகும். இந்த கோத்திரம் ஒரு கிணற்றிற்கு அருகே வசித்து வந்தது. அதனை முரைஸீஹ் என்று அழைக்கின்றனர். அது குஸாஆ என்ற இடத்திலிருந்து ஒரு நாள் பயணத் தொலைவில் உள்ளது. குஸா மற்றும் மதீனாவிற்கு இடையில் சுமார் 96 மைல் தொலைவில் உள்ளது.

(தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 48 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அல்லாமா இப்னு இஸ்ஹாக் அவர்களின் பார்வையில் பனூ முஸ்தலிக் போர் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. மூஸா பின் உக்பா அவர்களின் பார்வையில் ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இந்தப் போர் ஹிஜ்ரி 5 ஷஃபான் மாதத்தில் நிகழ்ந்ததாக வாகிதி கூறுகின்றார். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு நிகழ்ந்ததாகவே எழுதியுள்ளார்கள். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பனூ முஸ்தலிக் கோத்திரம் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு எண்ணம் கொண்டுள்ளது என்ற செய்தி கிடைத்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு 700 சஹாபிகளை அழைத்துக் கொண்டு முன்னேறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிர்கள் கொடியை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். மற்றோர் அறிவிப்பின்படி முஹாஜிர்களின் கொடியை ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களுக்கு வழங்கினார்கள். மேலும் அன்ஸார் கூட்டத்தினரின் கொடியை ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

(அல்பதாயா வன்நஹாயா தொகுதி 4 பக்கம் 169, 170 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இஃப்க் (அவதூறு) சம்பவம் குறித்து கிடைக்கின்ற விளக்கம் இவ்வாறாகும். அதாவது பனூ முஸ்தலிக் போரிலிருந்து திரும்பி வரும்போது ஹஸ்ரத் ஆயிஷா பின்த் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது நயவஞ்சகர்கள் புறமிருந்து பழி சுமத்தப்பட்டது. இந்த சம்பவம் வரலாற்று சம்பவத்தில் இஃப்க் (அவதூறு) சம்பவம் என்று அழைக்கப்படுகிறது. எனவே சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இந்த அறிவிப்பு ஒரு வகையில் சஹாபிகள் தொடர்பாக ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் தொடர்பாகவும் இங்கு எடுத்துரைப்பது அவசியமாகும்.

(குத்பா ஜுமுஆ 14 டிசம்பர் 2018 – அல்ஃபஸல் இன்டர்நேஷனல் 4 ஜனவரி 2019 பக்கம் 6,7)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பயணத்திற்கு புறப்படுவதற்கு எண்ணம் கொள்வார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தூய இணையர்களுக்கு மத்தியில் சீட்டுக் குலுக்கிப் போடுவார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். பின்னர் யாருடைய பெயரில் சீட்டு வருமோ அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடன் அழைத்துச் செல்வார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் ஒரு

போரில் எங்களுக்கு மத்தியில் சீட்டு குலுக்கிப் போட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது பெயர் சீட்டில் வந்தது. நான் அன்னார் (ஸல்) அவர்களுடன் சென்றேன். ஹிஜாபிற்கான கட்டளை இறங்கிய பிறகு நான் சென்றேன். அன்னார் கூறுகின்றார்கள்: நான் பல்லக்கில் சுமந்து செல்லப்பட்டேன். அதிலிருந்து இறக்கப்பட்டேன். நாங்கள் சென்று கொண்டிருந்தோம். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது போரிலிருந்து வெளியேறினார்கள். மேலும் திரும்பி வருகை தந்தார்கள். நாங்கள் மதீனாவிற்கு அருகில் வந்தோம். அப்போது ஓர் இரவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் தங்குவதற்கு கட்டளையிட்டார்கள். நான் எழுந்து நின்றேன். மக்கள் இடம் பெயர்வதற்கு அறிவிப்புச் செய்தார்கள். பின்னர் நான் நடந்து சென்றேன். எந்த அளவுக்கென்றால் படையை விட்டு முன்னேறி விட்டேன். பின்னர் நான் எனது தேவையை முடித்துக் கொண்டு பல்லக்கின் பக்கம் வந்தேன். மேலும் எனது நெஞ்சில் கை வைத்து பார்த்தபோது எனது அல்ஃபார் என்ற ஒரு வகை மாலை உடைந்து கீழே விழுந்திருந்தது.

எவ்வாறிருப்பினும் கூறுகின்றார்கள்: நான் திரும்பிச் சென்று எனது மாலையை தேடிக் கொண்டிருந்தேன். அதை தேடுவதில் நான் பின்தங்கி விட்டேன். மேலும் எனது சவாரியை தயார் செய்து கொண்டிருந்த நபர்கள் நான் பல்லக்கில் அமர்ந்திருப்பதாக எண்ணி எனது பல்லக்கை சுமந்து கொண்டார்கள். மேலும் அதனை ஒட்டகத்தின் மீது வைத்து விட்டார்கள்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் அதில் இருப்பதாக அவர்கள் கருதிக் கொண்டனர். ஏனென்றால் அக்காலத்தில் பெண்கள் மிகவும் மெலிந்திருந்தார்கள். பெண்கள் உடல் பருமன் கொண்டவர்களாக இருந்ததில்லை. அவர்கள் மிக குறைவாகவே உணவு உண்டு வந்தனர். எவ்வாறிருப்பினும் அந்த மக்கள் பல்லக்கை தூக்கியபோது பல்லக்கை தூக்குவதில் எந்த வித்தியாசத்தையும் உணரவில்லை. அவர்கள் அதனை சுமந்து கொண்டனர். நானோ சிறிய வயதுடையவளாக இருந்தேன். அவர்கள் ஒட்டகத்தை எழுப்பினர். மேலும் நடந்து சென்றனர். நான் எனது நகையை கண்டு கொண்டேன். அதற்குள் படை சென்று விட்டது. நான் அவர்கள் முகாமிட்டிருந்த இடத்திற்கு வந்தேன். அங்கு யாருமே இருக்கவில்லை. பின்னர் நான் முகாமிட்டிருந்த இடத்திற்கு சென்றேன். அவர்கள் பல்லக்கில் நான் இல்லை என்பதை அறியும்போது அவர்கள் என்னைத் தேடி வருவார்கள் என்று நான் எண்ணினேன். அப்போது எனது கண்கள் அயர்ந்து நான் தூங்கி விட்டேன்.

நான் ஸஃப்பான் பின் முஅத்தல் சுலமியின் படைக்கு பின்னால் இருந்தேன். அவர் காலையில் நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்தார். அவர் ஒரு தூங்கிக் கொண்டிருந்த மனிதரின் வடிவத்தை பார்த்தார். மேலும் பர்தாவிற்கான கட்டளை வருவதற்கு முன்பாக அவர் என்னை கண்டுள்ளார். அவர் என்னிடத்தில் வந்தார். அவர் இன்னாலில்லாஹ் என்று ஓதியபோது நான் விழித்து விட்டேன். மேலும் அவர்கள் என்னை பெண் ஒட்டகத்தில் அமர்த்தினார்கள். மேலும் அவர்கள் பெண் ஒட்டகத்தின் கால்களை மடக்கினார்கள். ஒட்டகம் அமர்ந்து கொண்டது. நான் அதன் மீது சவாரி செய்து கொண்டேன். எனது சவாரியை சுமந்து கொண்டு சென்றது. எந்த அளவுக்கென்றால் நாங்கள் படையை சென்றடைந்த பிறகு மக்கள் சரியாக மதிய வேளையில் ஓய்வெடுப்பதற்காக முகாமிட்டிருந்தார்கள். பின்னர் எவர் நாசத்திற்குள்ளாக இருந்தாரோ அவர் நாசமாகி விட்டார்.

அப்துல்லாஹ் பின் அபீ பின் சலூல் இந்த குழப்பத்தின் தோற்றுநராக இருந்தான். நாங்கள் மதீனாவை வந்தடைந்தோம். நான் அங்கு ஒரு மாதம் நோயுற்றிருந்தேன். பழிசுமத்தக் கூடிய மக்களின் பேச்சுகளுக்கு மக்கள் ஈர்க்கப்பட்டார்கள். நான் நோய்வாய்ப்பட்டிருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நான் முன்னர் நோயுற்றிருக்கும்போது கண்ட பரிவை அந்த நாட்களில் காணாததால் மிகவும் நிம்மதி இழந்திருந்தேன். அன்னார் (ஸல்) அவர்கள் உள்ளே வருவார்கள். ஸலாம் கூறுவார்கள். பின்னர் எப்படி இருக்கின்றீர்கள்? என்று கேட்பார்கள். எனக்கு அந்த சம்பவத்தைப் பற்றி அதாவது இஃப்க் (அவதூறு) சம்பவத்தைப் பற்றி எதுவும் தெரியவில்லை. எந்த அளவுக்கென்றால் நான் பலவீனமடைந்தபோது நானும், உம்மே மஸ்தஹ் ஆகியோர் மனாஸிஹ் என்ற இடத்திற்கு சென்றோம். அது கழிப்பறைக்கான இடமாக இருந்தது. இரவோடு இரவாகத்தான் நாங்கள் செல்வோம். இரவிற்காக காத்திருப்போம். அதுவரை நாங்கள் புறப்பட மாட்டோம். அதாவது நாங்கள் எங்களது வீட்டிற்கு அருகிலேயே கழிப்பறையை கட்டுவதற்கு முன்பு நிகழ்ந்த விஷயமாகும் இது அந்த நேரத்தில் வீடுகளில் கழிப்பறை இருக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் அவர்கள் கூறுகின்றார்கள்: அதற்கு முன்பு வரை காடுகள் அல்லது வீட்டிற்கு வெளியில் மறைமுகமான இடத்தில் இயற்கை தேவைகளை நிறைவேற்றுவதற்காக அரபுகள் சென்று வந்ததைப் போன்றே எங்களின் நிலை இருந்தது. நானும் உம்மே மஸ்தா பின்த் அபூர் இருவரும் சென்றோம். நாங்கள் சென்று கொண்டிருந்தோம். அப்போது அவர் தனது துப்பட்டாவை விலக்கினார். மேலும் முஸ்தா நாசமாகி விட்டார் என்று கூறினார். அப்போது நீ மிகவும் மோசமான விஷயத்தை கூறியுள்ளாய் என்று அவரிடம் நான் கூறினேன். நீங்கள் பத்ர் போரில் பங்கு பெற்றிருந்த நபரை தவறாக பேசுகின்றீரே என்று நான் கூறியபோது அவர், நீர் மிகவும் அப்பாவி பெண் ஆவாய். மக்கள் கூறுவதை நீர் கேட்கவில்லையா? என்று கூறினார். அப்போதுதான் அவர் எனக்கு அவதூறு பரப்புபவர்களின் விஷயங்களைக் கூறினார். அதனால் எனது நோய் மேலும் அதிகமாகி விட்டது.

பின்னர் நான் வீட்டிற்கு திரும்பி வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் வருகை தந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் ஸலாம் கூறினார்கள். நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். எனது பெற்றோரிடம் செல்வதற்கு எனக்கு அனுமதி தாருங்கள் என்று நான் கேட்டேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பெற்றோரிடம் செல்வதற்கு எனக்கு அனுமதி தாருங்கள் என்று கூறினார்கள். நான் அந்த நாட்களில் அதாவது எனது பெற்றோர்கள் சார்பாக அந்த செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பியிருந்தேன். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்கு அனுமதி வழங்கினார்கள். நான் எனது பெற்றோரிடம் சென்றேன். மக்கள் என்ன பேசிக் கொண்டிருக்கின்றார்கள்? என்று நான் எனது தாயாரிடம் கேட்டேன். எனது மகளே! இந்த விஷயத்தில் நீ உனது உயிரின் மீது அநீதி இழைக்காதே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒரு நபரிடத்தில் அழகிய மனைவி இருந்து அவரை அவர் நேசிக்கும் நிலையில் அவருக்கெதிராக விஷயங்கள் பேசப்படாத நிலை மிகக் குறைவாகவே இருந்துள்ளது என்று கூறினார்கள். நான் கூறினேன்: சுப்ஹானல்லாஹ். மக்கள் அதுபோன்ற விஷயத்தையா பேசுகின்றனர். அன்னார் அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கூறினார்கள்: நான் அந்த இரவை எவ்வாறு கழித்தேன் என்றால் காலை விடிந்திருந்தது. ஆனால் எனது கண்ணீர் நிற்கவில்லை. மேலும் எனக்கு சற்றும் உறக்கம் வரவில்லை.

பின்னர் காலை விடிந்ததும் ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) ஆகியோரை அழைத்தார்கள். வஹீ இறங்க தாமதம் ஆனபோது அவர்கள் இருவரிடமும் தமது மனைவிக்கு மணவிலக்கு கொடுப்பது சம்பந்தமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆலோசனை செய்ய விரும்பி இருந்தார்கள். ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களைப் பொறுத்தவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் இருந்த தொடர்பைப் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மிகவும் தூய பெண்மணியாக இருந்தார்கள் என்ற அன்னாரின் நிலையையும் அறிந்திருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அன்னார் தங்களின் மனைவி ஆவார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் அன்னாரிடம் நன்மையைத் தவிர வேறு எதனையும் அறிய மாட்டோம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்களைப் பொறுத்தவரை அன்னார் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்கள் மீது எந்த கஷ்டத்தையும் வைக்கவில்லை. அன்னாரைத் தவிர்த்து ஏராளமான மனைவிகள் உள்ளனர். தாங்கள் அந்தப் பெண் ஊழியரிடம் கேளுங்கள்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அவர் தங்களிடம் உண்மையை கூறி விடுவார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பரீராவை அழைத்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் பரீராவே! நீர் அவரிடத்தில் உங்களை சந்தேகத்தில் ஆழ்த்தும் ஏதாவது விஷயத்தை கண்டுள்ளீரா? என்று கேட்டார்கள். அதற்கு இல்லை என்று பரீரா கூறினார். தங்களை உண்மையுடன் அனுப்பிய அந்த இறைவனின் மீது ஆணையாக! அன்னார் வயதில் சிறிய பெண்மணி என்ற குறையை தவிர்த்து நான் அன்னாரிடத்தில் வேறு எந்த குறையையும் கண்டதில்லை. குலைக்கப்பட்ட மாவை அப்படியே விட்டு விட்டு அன்னார் உறங்கி விடுவார்கள். ஆடு வந்து அதை தின்று விடும். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதே நாளன்று எழுந்து நின்றார்கள். மேலும் அப்துல்லாஹ் பின் அபீ பின் சுலூல் குறித்து வருத்தம் தெரிவித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த நபரைக் குறித்து யார் என்ன நினைக்கின்றார்? அவர் எனது குடும்பத்தினர் குறித்து எனக்கு துன்பம் வழங்கியுள்ளார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது குடும்பத்தினரை குறித்து நன்மையை தவிர வேறு எதனையும் அறிவதில்லை. மக்களும் நன்மையை தவிர்த்து வேறு எதனையும் கண்டதில்லை. அவர் எனது குடும்பத்தினரிடம் வந்ததில்லை. ஆனால் அவர் என்னுடன் இவ்வாறு நடந்துள்ளார்.

ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) எழுந்து நின்றார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இறைவன் மீது ஆணையாக! நான் தங்களை துன்பத்தில் இருப்பதாக கருதுகிறேன். அவர் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர் என்றால் நாங்கள் அவரது கழுத்தை வெட்டி விடுவோம். அவர் எங்களது சகோதர கோத்திரமான கஸ்ரஜ் கோத்திரத்தை சார்ந்தவர் என்றால் பின்னர் தாங்கள் எங்களுக்கு வழிகாட்டுங்கள். நாங்கள் தங்களின் கட்டளைக்கேற்ப செயல்படுவோம். அப்போது ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) எழுந்து நின்றார்கள். அன்னார் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவராக இருந்தார்கள். அதற்கு முன்பு அன்னார் நல்ல மனிதராக இருந்தார்கள். ஆயினும் ஒரு கூட்டம் அன்னாரை தூண்டி விட்டிருந்தது. அன்னார் கூறினார்கள்: நீர் தவறாக கூறியுள்ளீர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் அவரைக் கொல்லக் கூடாது. அதாவது கோத்திரங்கள் தங்களுக்குள் மோதிக் கொண்டன. நீங்கள் அதற்கு ஆற்றல் பெற்றவரும் கிடையாது. அப்போது ஹஸ்ரத் உஸைது எழுந்து நின்றார். அவர் கூறினார்: நீர் தவறாக கூறியுள்ளீர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் நிச்சயமாக அவரைக் கொன்று விடுவோம். நீர் நயவஞ்சகர் ஆவீர். மேலும் நயவஞ்சகர் சார்பாக சண்டையிடுகின்றீர். அப்போது அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் என்ற இரு

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

கோத்திரத்தினரும் சண்டையிட்டனர். எந்த அளவுக்கென்றால் அவர்கள் போரிடுவதற்கு தயாராகி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேடை மீது ஏறி நின்றிருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் கீழே இறங்கி வந்து அவர்களின் வேகத்தை தணித்தார்கள். எந்த அளவுக்கென்றால் அவர்கள் மௌனமாகி விட்டனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களும் மௌனமாகி விட்டார்கள்.

நாள் முழுவதும் அழுது கொண்டிருந்ததாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த சம்பவம் உங்களுக்கு தெரிந்திருக்கும். ஆனால் அசல் விஷயம் என்னவாக இருந்ததென்றால், என்னவெல்லாம் நடந்து கொண்டிருந்ததோ அது நடந்து கொண்டிருந்தது. ஆனால் நான் நாள் முழுவதும் அழுது கொண்டிருந்தேன். எனது கண்ணீரும் நிற்கவில்லை. எனக்கு தூக்கமும் வரவில்லை. எனது தாயும் தந்தையும் என்னிடத்தில் வந்தார்கள். நான் இரண்டு இரவுகள் மற்றும் ஒரு பகல் அழுது கொண்டிருந்தேன். எந்த அளவுக்கென்றால் இவ்வாறு அழுது கொண்டிருப்பது எனது இதயத்தை நொறுக்கி விடும் என்று நான் கருதினேன். இதற்கிடையில் அவர்கள் இருவரும் அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் பெற்றோர்கள் எனக்கு அருகில் அமர்ந்திருந்தார்கள். நான் அழுது கொண்டிருந்தேன். ஓர் அன்ஸாரி பெண்மணி உள்ளே வருவதற்கு அனுமதி வேண்டினார். நான் அவருக்கு அனுமதி கொடுத்து விட்டேன். அவரும் அமர்ந்து என்னுடன் அழத் தொடங்கி விட்டார். நாங்கள் இந்த நிலையில் இருந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். மேலும் அமர்ந்து விட்டார்கள். என்னைப் பற்றி பேசப்பட்டதிலிருந்து அன்னார் எனக்கு அருகில் அமர்ந்ததில்லை. அன்னார் (ஸல்) அவர்கள் ஒரு மாதமாக இதே வழிமுறையை மேற்கொண்டிருந்தார்கள். எனது இந்த விவகாரத்தைக் குறித்து அன்னார் மீது எந்த வஹீயும் இறங்கவில்லை என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

மேலும் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: அன்னார் (ஸல்) தஷஹ்ஹுத் ஓதினார்கள். பின்னர் கூறினார்கள்: ஆயிஷாவே! உன்னைக் குறித்து எனக்கு இந்த விஷயம் தெரிய வந்துள்ளது. நீ குற்றமற்றவர் என்றால் நிச்சயம் அல்லாஹ் உமக்கு விடுதலை வழங்கி விடுவான். ஒருவேளை உம்மிடத்தில் ஏதாவது தடுமாற்றம் ஏற்பட்டிருந்தால் பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு வேண்டுவீராக. மேலும் அவனது சந்நிதானத்தில் தவ்பா செய்வீராக. ஏனென்றால் அடியார் தனது பாவத்தை ஒப்புக் கொண்டு பின்னர் அவர் தவ்பா செய்கின்றபோது அல்லாஹ்வும் அவர் பக்கம் கருணையுடன் கவனம் செலுத்துகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கூற்றை முடித்த பிறகு எனது கண்களில் கண்ணீர் நின்று விட்டது. எந்த அளவுக்கென்றால் நான் ஒரு துளியைக் கூட உணரவில்லை. நான் எனது தந்தையிடம் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் எனது சார்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பதில் கொடுக்கும்படி கூறினேன். அதற்கு அன்னார் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் என்ன கூற வேண்டும்? என்பதை நான் அறியேன். பின்னர் நான் எனது தாயிடம் கூறினேன்: நீங்கள் என் சார்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதற்கு பதிலளியுங்கள் என்று கூறினேன். இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு என்ன பதில் கூற வேண்டும்? என்பதை நான் அறியேன் என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் வயது குறைந்த பெண்ணாக இருந்தேன். திருக்குர்ஆனை அதிகமாக அறிந்திருக்கவில்லை. எனவே நான் கூறினேன்: இறைவன் மீது ஆணையாக! மக்கள் பேசுகின்ற விஷயங்களை நீங்கள் கேட்டு விட்டீர்கள். மேலும் அவை உங்களது உள்ளங்களில் குடிகொண்டு விட்டன. மேலும் நீங்கள் அதனை சரியானதாக புரிந்து கொண்டீர்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். நான் குற்றமற்றவள் என்று நான் உங்களிடம் கூறினால் உண்மையிலேயே நான் குற்றமற்றவள் என்பதை அல்லாஹ் அறிந்துள்ளான். எனினும் நீங்கள் என்னை இதில் உண்மையாளராக கருத மாட்டீர்கள். நான் உங்களிடத்தில் ஒரு விஷயத்தை ஒப்புக் கொண்டு விட்டால் நான் குற்றமற்றவள் என்பதை அல்லாஹ் அறிந்திருக்கின்றான். அந்நிலையில் நீங்கள் என்னை உண்மையாளராக புரிந்து கொள்வீர்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் என்னுடைய மற்றும் உங்களுடைய உதாரணத்தை யூசுஃப் (அலை) அவர்களின் தந்தையின் உதாரணத்தை தவிர வேறு உதாரணத்தை காணவில்லை. அன்னார் فَصَبْرٌ جَمِيلٌ وَاللّٰهُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ என்று கூறியிருந்தார்கள். மிகவும் நல்ல பொறுமை செய்வதே எனக்கு உகந்ததாகும். நீங்கள் கூறுகின்ற விஷயங்களை தெளிவுபடுத்துவதற்கு நான் அல்லாஹ்விடமே உதவி வேண்ட முடியும். மேலும் அவனிடம் உதவி வேண்டப்படும். பின்னர் நான் எனது படுக்கையை நோக்கி முகம் திருப்பிக் கொண்டேன். அல்லாஹ் எனது குற்றமற்ற தன்மையை வெளிப்படுத்துவான் என்று நான் நம்புகின்றேன். ஆனால் இறைவன் மீது ஆணையாக! அவன் என் தொடர்பாக வஹீ இறக்குவான் என்று நான் எண்ணவில்லை. என் தொடர்பாக திருக்குர்ஆனில் கூறப்படும் அளவில் எண்ணம் கொள்வதிலிருந்து நான் என்னை குறைந்தவளாக கருதியிருந்தேன். ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கனவில் ஏதாவது காட்டப்படும். அல்லாஹ் என்னை (அந்த அவதூறுகளிலிருந்து) விடுதலை செய்து விடுவான் என்று நான் நம்பியிருந்தேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து விலகி இருக்கவும் இல்லை. வீட்டிலுள்ளவர்களில் எவரும் வெளியில்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

சென்றிருக்கவும் இல்லை. அந்நிலையிலேயே அன்னார் (ஸல்) மீது வஹீ இறங்கியது. அன்னார் (ஸல்) அவர்கள் மீது கடுமையான தன்மை ஏற்பட்டது. வஹீயின் நேரத்தில் அந்த நிலை அன்னார் (ஸல்) அவர்களுக்கு ஏற்படுவதுண்டு. எந்த அளவுக்கென்றால் குளிர் காலத்தில் அன்னார் (ஸல்) அவர்களிடமிருந்து வியர்வை முத்துக்களைப் போன்று வடிந்து கொண்டிருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அந்தத் தன்மை நீங்கியபோது அன்னார் (ஸல்) புன்முறுவல் செய்து கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறிய முதல் விஷயம் இதுவாக இருந்தது. அதாவது ஆயிஷாவே! அல்லாஹ்வின் புகழை எடுத்துரையுங்கள். ஏனென்றால் அல்லாஹ் உங்களின் குற்றமற்ற தன்மையை வெளிப்படுத்தி விட்டான் என்று அன்னார் (ஸல்) கூறியுவுடன் எனது தாயார் என்னிடம் எழுந்திரு. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் செல் என்று கூறினார்கள். அதற்கு இல்லை! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அன்னார் (ஸல்) அவர்களிடம் செல்ல மாட்டேன். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் புகழ மாட்டேன் என்று நான் கூறினேன்.

அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்:

اِنَّ الَّذِيۡنَ جَآءُوۡ بِالۡاِفۡكِ عُصۡبَةٌ مِّنۡكُمۡ

நிச்சயமாக உங்களில் ஒரு கூட்டத்தினர் ஒரு மாபெரும் இட்டுக்கட்டை சுமத்தினார்கள்.

இந்த வசனத்தில் அல்லாஹ் எனது குற்றமற்றத் தன்மையை கூறி இருந்தான். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் தந்தை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: முஸ்தா பின் உஸாஸா என்பவர் தமக்கு நெருங்கியவராக இருந்த காரணத்தினால் அன்னார் அவருக்கு செலவிட்டு வந்தார்கள். ஏழை நபராக இருந்தார். அவருக்கு செலவுக்கு பணம் கொடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இனி ஒருபோதும் முஸ்தஹ்விற்கு செலவிற்கு ஒன்றும் கொடுக்க மாட்டேன். இதன் பிறகு அவர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைக் குறித்து கூறினார்கள். அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

وَلَا يَاۡتَلِ اُولُوا الۡفَضۡلِ مِنۡكُمۡ وَالسَّعَةِ اَنۡ
يُّؤۡتُوۡۤا اُولِى الۡقُرۡبٰى وَالۡمَسٰكِيۡنَ وَالۡمُهٰجِرِيۡنَ
فِىۡ سَبِيۡلِ اللّٰهِ‌ۖ وَلۡيَعۡفُوۡا وَلۡيَصۡفَحُوۡا‌ ؕ

اَلَا تُحِبُّوۡنَ اَنۡ يَّغۡفِرَ اللّٰهُ لَكُمۡ‌ ؕ وَاللّٰهُ غَفُوۡرٌ رَّحِيۡمٌ

உங்களில் செல்வந்தராக இருப்பவரும், வாய்ப்பு வசதி பெற்றவரும் தங்களின் உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும் அல்லாஹ்வின் வழியில் செலவிடுபவருக்கும் எதுவும் கொடுக்க மாட்டோம் என்று சத்தியம் செய்ய வேண்டாம். அவர்கள் மன்னித்து விட வேண்டும். அல்லாஹ் உங்களை மன்னிக்க வேண்டும் என்பதை நீங்கள் விரும்பவில்லையா? அல்லாஹ் மிகவும் மன்னிக்கக் கூடியவனும், மீண்டும் மீண்டும் கருணை காட்டக் கூடியவனும் ஆவான். (24:23)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஏன் இல்லை? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் என்னை மன்னிக்க வேண்டும் என்பதை நான் நிச்சயம் விரும்புகின்றேன் என்று கூறினார்கள். மேலும் அன்னார் (ரலி) முஸ்தஹ்விற்கு மீண்டும் கொடுக்க தொடங்கி விட்டார்கள். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) செலவிட்டு வந்த தொகையை மீண்டும் அவருக்கு செலவிட தொடங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது விவகாரத்தில் அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) விவகாரத்தில் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களிடம் கேட்டு வந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸைனபே! உங்களுக்கு தெரியுமா? அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களைக் குறித்து உங்களின் கருத்து என்ன? என்று கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் எனது செவிபுலனையும், பார்வை புலனையும் பாதுகாப்பாக வைத்துள்ளேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அன்னாரிடத்தில் நன்மையையே கண்டுள்ளேன் என்று அன்னார் கூறினார்கள்.

இதே ஸைனப் தான் என்னுடன் போட்டி போட்டு வந்தார். ஆனால் அல்லாஹ் அவரது பரிசுத்த தன்மையின் காரணமாக பாதுகாத்து விட்டான் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஷ் ஷஹாதத், ஹதீஸ் எண் 2661)

இது புகாரியின் ஒரு நீண்ட அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் தனது பழக்கங்களில் இதனையும் சேர்த்து வைத்துள்ளான். அதாவது அவன் தண்டனைக்குரிய முன்னறிவிப்புகளில் தவ்பா மற்றும் பாவமன்னிப்பு, துஆ மற்றும் சதகா போன்றவற்றின் நிலையில் விலக்கி விடுகின்றான். இதேபோன்று மனிதனுக்கும் அவன் இதே ஒழுக்கங்களை கற்றுக் கொடுத்துள்ளான். திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளிலிருந்து இந்த விஷயம் நிரூபணமாகியுள்ளதைப் போன்று அதாவது நயவஞ்சகர்கள் மிக அசுத்தமான எண்ணங்களுடன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கெதிராக பழியை சுமத்தி வந்தார்கள். இந்த உரையாடலில் சில பாமர சஹாபிகளும் இணைந்து கொண்டார்கள். அவர்களில் ஒரு சஹாபி எப்படிப்பட்டவராக இருந்தார் என்றால் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிலிருந்து இரண்டு வேளை ரொட்டியை உண்டு வந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரது இந்த குற்றத்தின்போது சத்தியம் செய்தார்கள். நான் இந்த குற்றச் செயலுக்கு தண்டனையாக ஒருபோதும் அவருக்கு ரொட்டி வழங்க மாட்டேன் என்று உடன்படிக்கை செய்திருந்தார்கள். அப்போது இந்த வசனம் இறங்கியது.

وَلۡيَعۡفُوۡا وَلۡيَصۡفَحُوۡا‌ ؕ اَلَا تُحِبُّوۡنَ
اَنۡ يَّغۡفِرَ اللّٰهُ لَكُمۡ‌ ؕ وَاللّٰهُ غَفُوۡرٌ رَّحِيۡمٌ

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது அந்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டார்கள். மேலும் வழக்கம்போல் உணவு வழங்கினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு தண்டனையாக ஏதேனும் உறுதிமொழி செய்யப்பட்டால் அதனை முறித்துக் கொள்வது நல்லொழுக்கத்தில் அடங்கும் என்பதன் அடிப்படையில் அது இஸ்லாமிய நல்லொழுக்கத்தில் அடங்கும். உதாரணமாக ஒருவர் தனது ஊழியரைக் குறித்து நான் நிச்சயம் அவருக்கு 50 செருப்படி கொடுப்பேன் என்று சத்தியம் செய்தால் பின்னர் அவரது தவ்பா மற்றும் உருக்கத்தால் அவரை மன்னித்து விடுவது இஸ்லாத்தின் சுன்னத் ஆகும். அதன் மூலம் ஓர் அடியார் அல்லாஹ்வின் பண்புகளை மேற்கொண்ட அடியாராக ஆக முடியும். ஆனால் வாக்குறுதிக்கு எதிராக செயல்படுவது ஆகுமானதல்ல. வாக்குறுதியை மீறி விடுவதால் கேள்வி கணக்கு நடைபெறும். ஆனால் தண்டனையை கைவிட்டு விட்டால் கிடையாது.

(ஸமீமா பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5 ரூஹானீ கஸாயின் தொகுதி 21 பக்கம் 181)

இங்கு வாக்குறுதி என்பது என்ன? தண்டனை என்பது என்ன? என்ற ஒரு தனி கருத்து உள்ளது. நான் இதற்கு முன்பும் ஒரு முறை எடுத்துரைத்துள்ளேன்.

எவ்வாறிருப்பினும் தற்போது ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் நடைபெற்ற அஹ்ஸாப் போரைப் பற்றி குறிப்பு வருகின்றது. மக்கத்து குரைஷிகள் மற்றும் முஸ்லிம்களுக்கு மத்தியில் நடைபெற்ற அந்தப் போர் மூன்றாவது பெரிய போராக இருந்தது. அதனை அகழ் போர் என்றும் கூறுகின்றார்கள். இந்தப் போர் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் நிகழ்ந்தது. ஏனென்றால் கைபரில் யூதர்களும், குரைஷிகளும் இன்னும் ஏராளமான குழுவினரும் அதில் கூட்டமாக வந்து மதீனாவின் மீது போர் தொடுத்து விட்டார்கள். எனவே திருக்குர்ஆனில் அஹ்ஸாப் போர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூத கோத்திரமான பனூ நளீரை நாடு கடத்தினார்கள். எனவே அவர்கள் கைபர் சென்று விட்டார்கள். அவர்களில் கண்ணியமானவர்களில் சிலர் மக்காவிற்கு புறப்பட்டார்கள். அவர்கள் குரைஷிகளை ஒன்றுகூட்டினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக ஒன்று திரளும்படி அந்த மக்கள் குரைஷிகளிடம் உடன்படிக்கை செய்து கொண்டனர். அனைவரும் ஹஸ்ரத் நபிகள்

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

நாயகம் (ஸல்) அவர்களுடன் போரிடுவதில் உடன்பட்டார்கள். மேலும் அதற்காக ஒரு குறிப்பிட்ட நேரத்தையும் வாக்குறுதியாக கொடுத்தார்கள். பனூ நஸீரைச் சார்ந்த அந்த மக்கள் குரைஷிகளிடமிருந்து புறப்பட்டார்கள். கத்ஃபான் மற்றும் சுலைம் கோத்திரத்தினரும் வந்தனர். மேலும் அவர்களிடமும் இதுபோன்ற ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது. பின்னர் அந்த மக்கள் அவர்களிடமிருந்து புறப்பட்டு விட்டனர். குரைஷிகள் தயாராகி விட்டார்கள். அவர்கள் குரைஷிகளையும், பலதரப்பட்ட கோத்திரங்களையும் அவர்களுக்கு எதிரிகளாக இருந்த அரபு கோத்திரங்களையும் ஒன்று கூட்டினார்கள். அப்போது அவர்களின் எண்ணிக்கை 4000 ஆக ஆகி விட்டது. அபுசுஃப்யான் பின் ஹரப் அவர்களின் தலைவராக இருந்தார். வழிப்பாதையில் ஏனைய கோத்திரத்தைச் சார்ந்த மக்களும் அந்தப் படையில் இணைந்து கொண்டனர். இவ்வாறு இந்தப் படையின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 10000 ஆகி விட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அந்த மக்கள் மக்காவிலிருந்து புறப்பட்டு விட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது. அன்னார் (ஸல்) அவர்கள் சஹாபிகளை அழைத்தார்கள். அவர்களுக்கு அதாவது சஹாபிகளுக்கு எதிரியைப் பற்றிய செய்தியை கூறினார்கள். மேலும் அந்த விவகாரத்தில் அவர்களுடன் ஆலோசனை செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்கள் அகழ் தோண்டுவதற்கான ஆலோசனையை வழங்கினார்கள். அதனை முஸ்லிம்கள் விரும்பி இருந்தனர். நபித்துவ காலத்தில் மதீனாவின் வடக்கு பக்கம் திறந்திருந்தது. எனவே மூன்று பக்கங்களிலும் வீடுகள் இருந்தன. அதைத் தாண்டி எதிரியால் செல்ல முடியாது. எனவே திறந்த வெளியில் அகழ் தோண்டி நகரத்தை பாதுகாக்க வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 3000 முஸ்லிம்களுடன் இணைந்து அகழ் தோண்ட ஆரம்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏனைய முஸ்லிம்களுடன் சேர்ந்து அகழ் தோண்டுவதற்கான பணியை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஊக்கம் கிடைப்பதற்காக அவ்வாறு செய்தார்கள். மொத்தம் 6 நாட்களில் இந்த அகழ் தோண்டப்பட்டது. அந்த அகழின் நீளம் சுமார் 6000 அடியாகவும், அல்லது 3.5 மைல் ஆகவும் இருந்தது.

(தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 50, 51 – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனேயே இருந்து வந்தார்கள். அகழ் தோண்டுகின்ற நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது ஆடையில் மண்ணை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அகழ் தோண்டுகின்ற பணி குறிப்பிட்ட நேரத்திற்குள் அதி விரைவாக முடிவடைந்து விட வேண்டும் என்பதற்காக ஏனைய சஹாபிகளுடன் இணைந்து அந்தப் பணியை மேற்கொண்டு வந்தார்கள்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய கலீஃபா அவ்வல் அபூபக்ர் சித்தீக் பக்கம் 65, 66 – 2006 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அகழ் தோண்டுவதில் எந்த முஸ்லிமும் பின்தங்கி இருக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கூடை கிடைக்காததால் விரைவாக அவர்கள் தமது ஆடைகளில் மண்ணை போட்டுக் கொண்டார்கள். அவர்கள் இருவரும் எந்தவொரு பணியிலும் எந்தவொரு பயணத்திலும் ஒருவர் மற்றவரை விட்டு பிரிந்ததில்லை.

(சபலுல் ஹுதா தொகுதி 4 பக்கம் 337 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 46 – 2017 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ் தோண்டுவதில் மிகக் கடுமையாக உழைத்தார்கள். சில முறை கடப்பாறையை வீசுவார்கள். சில முறை மண்வெட்டியைக் கொண்டு மண்ணை சமப்படுத்துவார்கள். சில முறை கூடையில் மண்ணை எடுத்து போடுவார்கள். ஒரு நாள் அன்னார் (ஸல்) அவர்களுக்கு மிக அதிகமான களைப்பு ஏற்பட்டிருந்தது. அப்போது அன்னார் (ஸல்) அவர்கள் அமர்ந்து விட்டார்கள். பின்னர் தனது இடப்புறத்தில் இருந்த கல்லின் மீது கையை ஊன்றினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தூக்கம் வந்து விட்டது. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமாட்டிற்கு அருகில் வந்து நின்று அந்த வழியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கடந்து சென்ற நபர்களை தடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எழுப்பி விடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்து வந்தார்கள்.

(சபலுல் ஹுதா தொகுதி 4 பக்கம் 367 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

குரைஷிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களின் 10000 நபர்களைக் கொண்ட படையானது மதீனாவின் முஸ்லிம்களை சுற்றி வளைத்துக் கொண்டது. அப்போது முற்றுகையின் காலத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) முஸ்லிம்களின் படையின் ஒரு பெரும் பகுதிக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்தார்கள். எங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தலைமை தாங்கி இருந்தார்களோ பிற்காலத்தில் அங்கு ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டது. அதனை மஸ்ஜித் சித்தீக் என்று கூறப்படுகிறது.

(ஹகீம் குலாம் நபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா சித்தீக் அக்பர் (ரலி) என்ற நூல் பக்கம் 41 – 2010 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சடிக்கப்பட்டது)

இன்னும் இந்த நற்குறிப்பு தொடர்ந்து நடைபெறும். இன்ஷா அல்லாஹ்.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை செய்ய விரும்புகின்றேன். அதில் முக்தார் அஹ்மது கோந்தல் சாஹிப் அவர்களின் மனைவியாகிய மதிப்பிற்குரிய முபாரக்கா பேகம் சாஹிபா அவர்களின் குறிப்பு முதலாவது நற்குறிப்பாகும். ஜனவரி மாதம் 11 ஆம் தேதி 93 வது வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான சவுத்ரி குலாம் முஹம்மது கோந்தல் சாஹிபின் மருமகளாக மர்ஹூமா இருந்தார்கள். மிக ஆர்வத்துடன் ஜமாஅத் தொண்டுகளை ஆற்றி வந்தார்கள். தனது கிராமமான சக் எனும் ஊரில் சத்ர் லஜ்னாவாக தொண்டாற்றி வந்தார்கள். நோன்பு, தொழுகையை பேணி வந்தார்கள். நல்ல, ஏழைகளை பராமரிக்கக் கூடிய தூய பெண்மணியாக இருந்தார்கள். வாழ்நாள் முழுவதும் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கு நற்பேறு கிடைத்துள்ளது. மர்ஹூமா வஸிய்யத் செய்த பெண்மணியாக இருந்தார். அன்னாரது உறவினர்களில் 5 மகன்களும், 3 மகள்களும் உள்ளனர். சிரோலியோன் முபல்லிக் ஆன இஃப்திகார் அஹ்மது கோந்தல் சாஹிப் அன்னாரின் மகன் ஆவார்கள். மேலும் முரப்பியான ஃபவாத் அஹ்மது சாஹிப் அவர்களின் தந்தைவழிப் பாட்டியாகவும் மர்ஹூமா இருந்தார்கள். அதுமட்டுமின்றி அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் மகன்வழிப் பேரன்களில் இன்னும் ஏராளமான முரப்பிமார்களும் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களும் உள்ளனர். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் தனது சந்ததியினருக்காக அவர்கள் செய்த துஆக்களை ஒப்புக் கொள்வானாக.

இரண்டாவது நற்குறிப்பு மீர் அப்துல் வஹீத் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ஜனவரி 13 ஆம் தேதி இரவில் மரணமடைந்துள்ளார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيۡهِ رٰجِعُوۡنَ

அன்னாரின் வயது 58 ஆக இருந்தது. அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் கொள்ளுப் பாட்டனாரான மீர் அஹ்மது தீன் சாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தில் 1911 ஆம் ஆண்டில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். தனது குடும்பத்தில் ஒரே அஹ்மதியாக இருந்தார்கள். அதேபோன்று மனைவி வீட்டில் ஹஸ்ரத் ஷேகுல்லாஹ் பக்ஷ் சாஹிப் (ரலி) அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அப்துல் வஹீத் சாஹிப் அவர்களின் தந்தைவழிப் பாட்டனாரின் பெயர் அப்துல் கரீம் சாஹிப் ஆகும். அன்னாருக்கு தப்லீக்கில் மிகுந்த ஆர்வம் இருந்தது. எனவே அன்னாரின் தந்தைவழிப் பாட்டனார் பெஷாவரில் மவ்லவி அப்துல் கரீம் என்ற பெயரால் மிகவும் பிரபல்யமாகி இருந்தார்கள். தனிப்பட்ட முறையில் நிறைய படித்து வந்தார்கள். தனக்கென ஒரு நூலகத்தையும் உருவாக்கி இருந்தார்கள்.

1974 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் தலைமையில் பாராளுமன்றத்திற்கு நமது குழு ஒன்று சென்றபோது சில முக்கிய புத்தகங்களின் தேவை இருந்தது. அந்தப் புத்தகங்கள் அன்னாரின் நூலகத்திலிருந்து கிடைத்தன. அன்னாரின் மருமகள் இந்த செய்தியை

கூறியுள்ளார். அதாவது டிசம்பர் 9 ஆம் தேதி 2020 ஆம் ஆண்டு நபித்துவ நிந்தனை என்ற பொய் குற்றச்சாட்டின் கீழ் C-295 என்ற பிரிவின் கீழ் அன்னாருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. முல்லாக்களும், பொது மக்களும் அன்னாரின் வீட்டை சுற்றி வளைத்து விட்டனர். ஆனால் காவல்துறை அன்னாரை குடும்பத்துடன் எப்படியோ அங்கிருந்து வெளியேற்றி விட்டார்கள். மேலும் ராவல்பிண்டிக்கு கொண்டு சேர்த்து விட்டார்கள். சிறிது நாட்களுக்குப் பிறகு ராவல்பிண்டி நகரத்திலேயே இரவில் அன்னாரின் வீட்டை சோதனையிட்டு அன்னாரின் மகனான அப்துல் மஜீத் சாஹிபை காவல்துறை கைது செய்தது. அல்லாஹ் மீர் அப்துல் வஹீத் சாஹிப் அவர்களுக்கு 2 மகனையும், 1 மகளையும் வழங்கி இருந்தான். அன்னாரின் ஒரு மகனைக் குறித்து அதாவது அப்துல் மஜீத் சாஹிப் காவல்துறையால் கைது செய்யப்பட்டார்கள் என்று தற்போது நான் கூறியிருந்தேன். அன்னார் இப்போது வரை இறைவழி கைதியாக சிறையிலேயே உள்ளார்கள். அன்னாரின் தந்தையின் மரணம் நிகழ்ந்து விட்டது. அன்னாரால் கலந்து கொள்ள முடியவில்லை.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் உறவினர்களுக்கு பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக. கைதியாக இருக்கின்ற அன்னாரின் மகனுக்கு சுமார் 20 வயது இருக்கும். அல்லாஹ் அவரின் விடுதலைக்கான ஏற்பாட்டையும் விரைவில் செய்வானாக.

மூன்றாவது நற்குறிப்பு அமெரிக்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய செய்யது வகார் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். ஜனவரி 17 ஆம் தேதி 58 வது வயதில் மாரடைப்பின் காரணமாக அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

வகார் அஹ்மது சாஹிபின் மனைவி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் மகள்வழி கொள்ளுப் பேத்தியும், அன்னாரின் மகள்வழிப் பேத்தியும் ஆவார்கள். ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் மகன்வழிப் பேத்தியின் மகளும் ஆவார்கள். இந்த அடிப்படையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்துடன் அன்னாருக்கு தொடர்பு உள்ளது. அன்னாரின் திருமணம் ஷாஹ் சாஹிபின் குடும்பத்தில் நிகழ்ந்தது. அந்த குடும்பத்தில் வகார் ஷாஹ் சாஹிபின் தந்தைவழி பாட்டனார் செய்யது டாக்டர் ஸஹூர் ஷாஹ் சாஹிப் அவர்களுக்கு ஓய்வு பெற்ற பிறகு வக்ஃப் செய்வதற்கு நற்பேறு கிடைத்தது. மேலும் ஃபிஜி நாட்டில் மூன்றாவது கிலாஃபத் காலகட்டத்தில் முபல்லிக் ஆக சில ஆண்டுகள் இருந்தார்கள். பின்னர் ரப்வாவிலும் தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்தது. ஜமாஅத்துடனும், கிலாஃபத்துடனும் நன்றியுணர்வு கொண்ட குடும்பம் ஆகும்.

அன்னாரின் மனைவி ஷாஸியா கான் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்த திருமண பந்தத்திற்கு துஆ செய்யுமாறு கூறினார்கள். துஆக்கள் செய்த பிறகு நான் சம்மதித்து விட்டேன். அப்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்த திருமண பந்தத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள். அதாவது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்த திருமண பந்தத்தை உறுதி செய்தார்கள். வகார் சாஹிப் அவர்கள் 33 வருட கால திருமண வாழ்க்கையில் எனது விரலைப் பிடித்து என்னை அழைத்துச் சென்றார்கள். ஒவ்வொரு தேவை மற்றும் விருப்பத்தையும் கருத்தில் கொண்டார்கள். தன்னிகரற்ற தந்தையாக இருந்தார்கள். ஒருபோதும் தனக்காக எதையும் செய்ததில்லை. மிக எளிய மனிதராக இருந்தார்கள். தமக்கென எந்த விருப்பமும் இருந்திருக்கவில்லை. ஏதாவது இருந்தாலும் கூட அதனை குடும்பத்தினர்களுக்காக தியாகம் செய்து விடுவார்கள்.

என்னைப் பொறுத்தவரை அந்த நாள் எனக்கு மிக மிக அழகிய நாளாக இருந்தது. அந்த நாளில் அன்னார் ஒருவரிடம் மிகப் பெருமிதத்துடன் இவ்வாறு கூறினார்கள்: அதாவது நான் பள்ளிவாசலுக்கு செல்கின்றேன். எனது உறுதிமொழியை நான் எடுக்கின்றேன். என்னைப் பொறுத்தவரை இந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதை விட மிக அவசியமான விஷயம் வேறு எதுவும் இல்லை. இந்த உறுதிமொழிக்காக என்னால் எல்லாவற்றையும் தியாகம் செய்ய முடியும்.

இது வெறும் பேச்சாக இருக்கவில்லை. மாறாக நான் அதனை பார்த்துள்ளேன். ஒரு பெரும் சோதனை அன்னாருக்கு வந்தது. அன்னார் அந்த உறுதிமொழியை முழுமை செய்தார்கள். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அன்னார் செய்திருந்த உடன்படிக்கையை அன்னார் நிறைவேற்றி வந்தார்கள். அதனை முழுமை செய்தார்கள். எந்த உறவையும் பொருட்படுத்தவில்லை. கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதிலிருந்து அன்னார் ஒரு அடி கூட வெளியில் எடுத்து வைத்ததில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: எந்த விஷயம் அன்னாருக்கு ஒருபோதும் புரியாமல் இருந்ததோ அதற்கும் அன்னார் கட்டுப்பட்டு வந்தார்கள். நமது பணி கட்டுப்படுவதே என்று கூறி வந்தார்கள். மிகவும் நன்றியுணர்வு கொண்ட இயல்பை உடையவராக இருந்தார்கள். எப்போதும் எனக்கும் அதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். பொருள் தியாகத்தில் ஒருபோதும் எந்த கவனக்குறைவும் செய்ததில்லை.

கனடா ஜாமிஆ அஹ்மதிய்யாவிலிருந்து ஷாஹிது பட்டம் பெற்று தற்போது முரப்பியாக இருக்கின்ற அன்னாரின் மகன் அன்பிற்குரிய செய்யது ஆதில் அஹ்மது சாஹிப் கூறுகின்றார்: அல்லாஹ்வின் அருளால் எனது தந்தை ஓர் எளிய மற்றும் தூய மனிதராக இருந்தார்கள். ஒருபோதும் தம்மைப் பற்றி கவலைப்பட்டதில்லை. எப்போதும் அனைத்து பிள்ளைகள் மற்றும் தாயின் தேவைகளை கருத்தில் வைத்தார்கள். எந்தவொரு நல்ல பொருளையும் தனக்காக வாங்கியதில்லை. மாறாக, பல முறை உங்களுக்காகவும் செலவு செய்து கொள்ளுங்கள் என நினைவூட்ட வேண்டியதிருந்தது. முரப்பிமார்கள் மற்றும் ஜமாஅத் அமைப்பிற்கு மிகவும் கண்ணியம் வழங்கி வந்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் மகள்வழிப் பேரனும், ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா அவர்களின் மகன்வழிப் பேரனுமாகிய மர்ஹூமின் மாமனார் மஹ்மூத் அஹ்மது கான் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

வகார் அதாவது அன்னாரின் மருமகன் மிகவும் அழகிய நல்லொழுக்கம் கொண்ட மற்றும் விருந்து உபசரிப்பு செய்யக் கூடிய மனிதராக இருந்தார். எவ்வளவு விருந்தினர் வந்து விட்டாலும், என்ன தான் நடந்தாலும், அன்னாருடன் என்ன விஷயம் பேசப்பட்டாலும், நான் அவரின் முகத்தில் ஒருபோதும் சோர்வை கண்டதில்லை.

அடுத்து கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு உள்ளது. துவக்கத்தில் நான் அன்னாரது மகன் ஆதில் அஹ்மதின் பொறுப்பற்ற தன்மைக் குறித்து மீண்டும் மீண்டும் கண்டித்து வந்தேன். ஆனால் ஆதில் வக்ஃப் செய்தபோது பின்னர் வகாரின் நடத்தை முற்றிலும் மாறி விட்டது. பின்னர் அதே பிள்ளை மற்ற அனைவரைக் காட்டிலும் மிக நெருங்கிய பிள்ளையாக ஆகி விட்டார். அவருக்கு மிகுந்த கண்ணியமும் மரியாதையும் கொடுக்கத் தொடங்கி விட்டார்.

அபுதாபியின் முன்னாள் அமீர் முனீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: வகார் சாஹிப் அபுதாபியில் பணியாற்றி வந்தார்கள். பணியாற்றி வந்தபோது குடும்பத்துடன் இங்கு தங்கியிருந்தார்கள். அந்த காலத்தில் அன்னாருடன் நான் குடும்பத் தொடர்புகளையும் ஏற்படுத்தி இருந்தேன். வங்கியில் பணி செய்யக் கூடிய வங்கியாளராக அன்னார் இருந்தார்கள். இயல்பில் எளிமையும், அனைவருடனும் சிரித்த முகத்துடன் பழகுவதும் அன்னாரின் சிறப்பு நற்பண்பாக இருந்தது. ஜமாஅத் மற்றும் அமைப்புடன் ஆழமான தொடர்பு வைத்திருந்தார்கள். கிலாஃபத்தின் மீது எல்லையற்ற அன்பும், கட்டுப்படுதலுக்கான உணர்வாலும் நிறைந்திருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: அமெரிக்கா செல்லும் வரை தமது இருப்பிடத்தை ஜமாஅத்தின் தேவைகளுக்காக மிகத் திறந்த மனதுடன் வழங்கி வந்தார்கள். ஜுமுஆ மற்றும் ஏனைய கூட்டங்களுக்காக அது பயன்பட்டு வந்தது. ஜமாஅத்தின் ஆடிட்டராகவும் பணியாற்றுவதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது.

அதேபோன்று செய்யது ஹாஷிம் அக்பர் அவர்களும் இவ்வாறு எழுதியுள்ளார்கள். அதாவது நான் அன்னாருடன் பணி செய்துள்ளேன். எப்போதும் நல்ல மனதுடன் பழகுபவராகவும், படைப்பின சேவைக்கான உணர்வால் நிறைந்தவராகவும் நான் அன்னாரை கண்டுள்ளேன்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அன்னாரின் பிள்ளைகளுக்கும் நன்மைகளை செய்வதற்கு நற்பேறு வழங்குவானாக. மேலும் அன்னார் தமது பிள்ளைகளுக்காக செய்த துஆக்களையும் ஒப்புக் கொள்வானாக.

இந்த அனைவரது ஜனாஸா தொழுகைகளையும் நான் தொழுகைகளுக்குப் பிறகு தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

### மல்ஃபூஸாத் (முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

வீணானவை ஆகும். இறைவனுக்காக உத்வேகம் கொள்ளாதவரை அந்த சஜ்தாக்கள் வெறும் மந்திரங்களாக மட்டுமே இருக்கும். அதன் மூலமாக அவர்கள் சொர்க்கத்தை பெற விரும்புகின்றனர்.

நினைவிற் கொள்ளுங்கள். உண்மையற்ற எந்த பௌதீக விஷயமும் பயனளிக்க கூடியதாக இருக்க முடியாது. உதாரணமாக, உங்களின் குர்பானியின் இறைச்சி இறைவனை சென்றடைவதில்லை என்று கூறப்பட்டிருப்பதைப் போன்று உங்களது ருகூவும், சஜ்தாக்களும் உண்மையானதாக இல்லாத வரை இறைவனை சென்றடைவதில்லை. இறைவன் உண்மையை விரும்புகின்றான். எவர் இறைவனது கண்ணியம் மற்றும் மகத்துவத்திற்காக உத்வேகம் கொண்டுள்ளாரோ அவரை இறைவன் நேசிக்கின்றான். அப்படிப்பட்ட மக்கள் ஒரு நுட்பமான வழியில் நடக்கின்றனர். வேறு ஒரு மனிதன் அவருடன் செல்ல முடியாது. உண்மை உருவாகாத வரை மனிதன் முன்னேற்றம் அடைய முடியாது. மனிதனிடத்தில் உத்வேகம் ஏற்படாத வரை அவனுக்கு எந்த இன்பத்தையும் வழங்க மாட்டேன் என்று ஒரு வகையில் இறைவன் சத்தியம் செய்துள்ளான்.

ஒவ்வொரு மனிதனிடமும் ஓர் ஆசை இருக்கின்றது. ஆனால் இறைவனின் மகத்துவத்தை மற்ற எல்லா ஆசைகளை விடவும் முதன்மைப்படுத்தாத வரை அவர் நம்பிக்கையாளராக முடியாது. நெருக்கமானவர் மற்றும் நண்பர் வலி என்று கூறப்படுகின்றார். நண்பர் எதனை விரும்புவாரோ அதனையே இவர் விரும்புவார். அப்போதுதான் இவர் வலி என்று அழைக்கப்படுகின்றார்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

எனவே மனிதன் இறைவனுக்காக உத்வேகம் கொள்ள வேண்டும். பின்னர் அவர் தனது ஏனைய மனிதர்களை விட முன்னேறி விடுவார். இறைவனின் நெருக்கம் பெற்ற மக்களைச் சார்ந்தவராக ஆகி விடுவார். பிணத்தைப் போன்று இருக்கக் கூடாது. பிணத்தின் வாயில் ஒரு பொருள் ஒரு பக்கமாக ஊற்றப்பட்டால் அது மற்றொரு பக்கமாக வெளியேறி விடுகின்றது. இதேபோன்று தீய நேரத்தில் எந்தவொரு நல்ல விஷயமும் உள்ளே செல்வதில்லை.

நினைவிற் கொள்ளுங்கள். இறைவனுக்காக சுயமே உத்வேகம் கொள்ளாதவரை எந்த இறைவணக்கமும், தர்மமும் ஒப்புக் கொள்ளப்படுவதில்லை. அந்த தியாகத்துடன் எந்த கலப்படமும், சுயநலன்களும் இருக்கக் கூடாது. இந்த உத்வேகம் என்னிடத்தில் ஏன் உள்ளது? என்பதை சுயமே அறிந்திருக்கவும் கூடாது. அதுபோன்ற மக்கள் அதிக எண்ணிக்கையில் உருவாகுவது மிகவும் அவசியமாகும். ஆனால் இறைவனின் நாட்டமின்றி எதுவும் நடக்க முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 357 – 358 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### முதல் பக்கத்தின் தொடர்ச்சி...
### ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்று...

சுருக்கமாக, மறுமையை நிராகரிப்பதன் காரணமாக அவர்களிடம் கவனமின்மை ஏற்படுகின்றது. உள்ளம் ஞானத்திலிருந்து இழப்பிற்குரியதாக ஆகி விடுகின்றது. மேலும் அதன் காரணமாக வெளிப்படையான, உறுதியான விஷயத்தை நிராகரிப்பதிலும் மனிதன் தைரியமாக செயல்படுகின்றான். மேலும் அவற்றை சீர்தூக்கிப் பார்ப்பதன் பக்கம் கவனம் செலுத்துவது கிடையாது.

சுருக்கமாக, இந்த இடத்தில் مُّنْكِرَةٌ என்பதன் பொருள் நிராகரிக்கக் கூடியவர்கள் என்பதல்ல. மாறாக அறிவீனர்கள் மற்றும் அறியாதவர்கள் என்பதாகும். மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கையின் மீது ஈமான் கொள்ளாததன் காரணமாக கவனத்துடன் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்ற உணர்வு மனிதனிடம் இருப்பதில்லை. எனவே இந்தப் பழக்கத்தின் காரணமாக உள்ளத்தில் புரியும் தன்மை சென்று விடுகின்றது. மேலும் நமது ஒரு கொள்கை மற்ற கொள்கைக்கு எதிராக உள்ளது என்ற உணர்வும் அவர்களிடம் ஏற்படுவதில்லை.

மரணத்திற்குப் பிறகுள்ள உலகை நிராகரிப்பதன் இரண்டாவது விளைவாக இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது. அதாவது அந்நிலையில் அவர்களிடம் அகந்தை உருவாகி விடுகின்றது. ஏனென்றால் எந்த நபர் நற்கூலி மற்றும் தண்டனை மீது நம்பிக்கை கொள்வதில்லையோ அவர் தீமையில் மூழ்கி விடுகின்றார். எவர் அவ்வாறு தைரியம் கொண்டு விடுவாரோ அத்தகைய நபர் உண்மையை ஒப்புக் கொள்வதற்கான அவசியத்தை உணர்வதில்லை.

சுருக்கமாக, قُلُوْبُهُمْ مُّنْكِرَةٌ وَّهُمْ مُّسْتَكْبِرُوْنَ என்ற சொற்களில் உண்மையில் இரண்டு வகையான இணை வைப்பவர்களைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் யாரென்றால், கவனத்துடன் சீர்தூக்கிப் பார்க்கின்ற தன்மையை இழந்து விடுபவர். மேலும் அவர்கள் அறிவீனத்தில் மூழ்கி விடுகின்றனர். உள்ளம் நோய்வாய்ப்பட்டதன் காரணமாக அவர்கள் உண்மையை புரிவதிலிருந்து இழப்பிற்குரியவர்களாகி விடுகின்றனர். இரண்டாம் வகை மக்கள் யாரென்றால், அவர்கள் சான்றுகளை கேட்ட பிறகு ஏக இறை கொள்கையை உள்ளத்தில் சரியானதாக கருதுகின்றனர். ஆனால் அகந்தை மற்றும் பிடிவாதத்தின் காரணமாக அதனை ஒப்புக் கொள்வதில்லை. ஏனென்றால் நற்கூலி மற்றும் தண்டனையை நிராகரிப்பதன் காரணமாக அவர்கள் அச்சமற்றவர்களாக இருக்கின்றனர். உண்மையை நிராகரிப்பதில் எந்த பாதிப்பையும் அவர்கள் காண்பதில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 153 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### ஹுஸூர் அவர்களுடன் கேம்பியா தேசிய செயற்குழு சந்திப்பு... (12 ஆம் பக்க தொடர்ச்சி...)

விஷயத்தை தெளிவுபடுத்தியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் இருக்கின்றீர்கள். அதாவது அல்லாஹ்வின் தொண்டர் ஆவீர்கள். எனவே சிறந்த வழிமுறை இதுவே ஆகும். நீங்கள் தூயவர்களாக திகழ்ந்தவாறு நேர்மையுடன் உங்களது அனைத்து பொறுப்புகளையும் நிறைவேற்றுங்கள். மேலும் சிறந்த வழிமுறை என்னவென்றால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக தொண்டாற்றுவது தொடர்பாக தங்களிடம் என்ன பொறுப்பு கொடுக்கப்பட்டாலும் அதனை ஆர்வத்துடன் சுறுசுறுப்பாக நிறைவேற்றுவதற்கு தயாராகி விடுங்கள்.

இது தொடர்பாக அறிவுரை வழங்கியவாறு அதாவது ஓர் அஹ்மதி முஸ்லிம் இளைஞர் தனது நாட்டிற்கு எவ்வாறு தொண்டாற்ற முடியும்? என்று அறிவுறுத்தியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உங்களது நாட்டிற்கு தொண்டாற்றுவதற்கு நீங்கள் எப்போதும் நம்பிக்கையுடனும், தூய மனதுடனும் தயாராக இருக்க வேண்டும். உதாரணமாக நீங்கள் ஏதாவதொரு அரசாங்க துறையில் பணி செய்கின்றீர்கள் என்றால், நேர்மையுடனும், தூய்மையுடனும் பணி செய்ய வேண்டும். இந்த நபர் உழைப்புடனும், நேர்மையுடனும், தூய்மையுடனும் பணி செய்யக் கூடியவர் ஆவார். இவர் சமுதாயம் மற்றும் நாட்டின் மீது நன்றியுணர்வு கொண்டவர் ஆவார் என்பது மக்களுக்கு தெரிய வேண்டும். தேசப்பற்று ஈமானின் ஒரு பகுதியாகும் என்று நாம் எப்போதும் கூறுகின்றோம். எனவே இந்த விஷயங்கள் உங்களின் எண்ணங்களில் இருக்குமென்றால் பின்னர் நீங்கள் உங்களது நாட்டிற்கு தொண்டாற்றுவதை உங்களது ஈமானின் கட்டாய அங்கமாக புரிந்து கொள்வீர்கள்.

ஆக இதுவே அந்த விஷயங்கள் ஆகும். இதனை நீங்கள் எப்போதும் கவனத்தில் வைத்திருக்க வேண்டும். அதாவது தூயவர்களாக இருக்க வேண்டும். நீங்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு தொண்டாற்றிக் கொண்டிருந்தாலும் சரியே; அல்லது நாடு மற்றும் சமுதாயத்திற்கு தொண்டாற்றினாலும் சரியே. உங்களது பணிகளை நீங்கள் நேர்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

ஆஃப்ரிக்கா நாடு எப்படி தன்னிறைவு பெற்ற நாடாகவும், முன்னேற்றமடைந்த நாடாகவும் ஆக முடியும்? என்று மற்றொரு காதிம் கேட்டார். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இதற்கு தெளிவான விளக்கமான வழிகாட்டலை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்: உழைக்கக் கூடிய ஒவ்வொரு சமுதாயமும் முன்னேற்றமடைகின்றது. மேலும் அப்படிப்பட்ட சமுதாயம் தனது நோக்கத்தை அடைந்து விடுகின்றது. முதல் விஷயம் என்னவென்றால், நீங்கள் கல்வியின் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும். உங்களின் படிப்பறிவு சதவிகிதம் மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தொடக்கப்பள்ளி கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார் என்பது மட்டும் போதுமானதல்ல. மாறாக, ஆஃப்ரிக்க

நாடுகளின் அரசாங்கங்களுக்கு இந்த இலக்கு இருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும், ஆண் அல்லது பெண் மிக அதிகமாக படித்தவராக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் உயர்கல்வி வரை பயில வேண்டும். பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்றால் மிகச் சிறந்ததாகும். நீங்கள் கல்வியறிவு பெற்றவர்களாக இருக்கின்றீர்கள் என்றால் மேலும் உங்களின் கல்வி அறிவு சதவிகிதம் உயர்ந்ததாக இருக்குமென்றால் பின்னர் இந்த விஷயம் உங்களின் மூளையை விசாலமாக்கக் கூடியதாக இருக்கும். உலகம் எதன் பக்கம் செல்கின்றது? என்பதை பார்ப்பதற்கு நீங்கள் முயற்சி செய்வீர்கள். மேலும் உங்களுக்கு ஓர் இலக்கை நிர்ணயித்துக் கொள்வீர்கள். மேலும் உங்களது இலக்கையும், நோக்கத்தையும் கண் முன் நிறுத்திக் கொள்வீர்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உங்களது பணிகளில் நேர்மையானவர்களாகவும், தூயவர்களாகவும் இருக்க வேண்டும். நீங்கள் ஆசிரியராக இருந்தால் உங்களது மாணவர்களுக்கு முழுமையான தயாரிப்புடன் கல்வி கற்றுக் கொடுப்பதில் கவனத்தை நிலைநாட்டுங்கள். நீங்கள் அதிகாரிகளாக இருக்கின்றீர்கள் என்றால் உங்களது பணியில் மிகவும் தூயவராகவும், நேர்மையாளராகவும் இருங்கள். எனவே முழுமையாக முயற்சி செய்யுங்கள். நம்பிக்கையுடனும், தூய்மையுடனும் உங்களது நாட்டிற்காக பணி செய்யுங்கள். இந்த விஷயம் நீங்கள் முன்னேறுவதில் உதவி செய்யும். நான் கூறியதுபோன்று அடிப்படை விஷயம் கல்வி ஆகும். ஒவ்வொரு தனி நபருக்கும் சிறந்த கல்வி கிடைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். பின்னர் இந்த அறிவையும், நுட்பமான ஞானத்தையும் தனது நாடு மற்றும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பின்னர் ஒரு கேள்விக்கு பதிலாக அதாவது தனது ஈமானை பாதுகாத்துக் கொள்வதற்காக உலக வணக்கத்திலிருந்து எவ்வாறு விடுதலை பெறுவது? என்பதற்கு பதிலாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: சிறந்த வழிமுறை என்னவென்றால், அல்லாஹ்விற்குரிய வணக்க கடமைகளை நிறைவேற்ற வேண்டும். அதாவது அல்லாஹ்விற்கு நீங்கள் செலுத்த வேண்டிய உரிமைகளை, பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். உங்களது ஈமானில் உறுதியுடன் நிலைநிற்க வேண்டும். அல்லாஹ் உங்களின் துஆக்களை கேட்கின்றான் என்ற நம்பிக்கையுடன் நீங்கள் நிலைநிற்க வேண்டும். அவன் உங்களை உலக வணக்கத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக துஆ செய்ய வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேலும் கூறினார்கள்: அடுத்து திருக்குர்ஆன் நமக்கு வழங்கியுள்ள கட்டளைகளின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தின்படி அமல் செய்யுங்கள். உலக ரீதியில் செல்வம் அல்லது அந்தஸ்தில் உங்களை விட உயர்வாக இருப்பவரின் பக்கம் உங்களின் பார்வையை செலுத்தாதீர்கள். எப்போதும் செல்வத்தின் அடிப்படையில் உங்களை விட குறைந்த நிலையில் இருக்கின்ற நபரை பாருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஏனென்றால் அப்போது தான் நாம் மேன்மை பெற முடியும். இருந்தபோதிலும் நல்லொழுக்கம் அல்லது ஆன்மீக ரீதியில் உங்களை விட உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவரை பாருங்கள். இதன் மூலம் நீங்கள் உங்களது முன்னுரிமைகளை மாற்றிக் கொள்ள முடியும்.

மேலும் உலக வணங்கிகளின் விஷயங்களின் பக்கம் செல்வதற்கு பகரமாக அல்லது உலக வணங்கிகளாக இருப்பவர்களுக்கு பின்னால் செல்வதற்கு பகரமாக நல்லொழுக்கம் மற்றும் ஆன்மீக ரீதியில் சிறந்தவராக இருப்பவர்களுக்கு பின்னால் நீங்கள் செல்ல முடியும்.


*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

**தொலைபேசி எண்: 1800 103 2131**

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)


கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் ஹுஸூர்! தாங்கள் ஆன்லைன் சந்திப்பின் மூலம் பயன் பெறுகின்றீர்களா? உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பல்வேறு ஜமாஅத்துகளில் நடைபெறுகின்ற இந்த சந்திப்பிலிருந்து பயன் பெறுகின்றீர்களா? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், நீங்கள் இந்த சந்திப்புகளிலிருந்து பயன் பெறுகின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு நிச்சயமாக பயன் பெறுகின்றேன் என்று அவர் கூறினார். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அறிவுரைகள் மற்றும் பதில்களை Youtube வீடியோ கிளிப்ஸ்கள் மூலமாக பார்க்கின்றேன். MTA International மூலமாக முந்தைய ஆன்லைன் சந்திப்புகள் காட்டப்படுகின்றன என்று அவர் கூறினார்.

எவ்வாறு இந்த ஆன்லைன் சந்திப்புகள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு நேரடியாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களின் ஈமான், உறுதி மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றது என்பதைஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்: இந்த சந்திப்புகளின் மூலமாக எனக்கு கிடைக்கின்ற குறைந்தபட்ச ஒரு நன்மை என்னவென்றால், என்னால் உங்களின் முகங்களை பார்க்க முடிகின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்கள் தங்களது ஈமானிலும், உறுதிப்பாட்டிலும் எந்த அளவிற்கு வலிமையானவர்களாகவும், அசைக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பதை என்னால் பார்க்க முடிகின்றது. என்னால் அவர்களின் முகங்களில் கிலாஃபத்தின் மீது இருக்கின்ற அவர்களின் நேசத்தை காண முடிகின்றது. தற்போது நான் உங்களின் முகங்களில் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்று. ஆக ஆன்லைன் சந்திப்புகளிலிருந்து நான் பெறுகின்ற நன்மை இது ஆகும்.

மறுமை வாழ்க்கையை எவ்வாறு நிரூபிக்க முடியும்? என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் மற்றொரு காதிம் கேட்டார். அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இறைவனின் நபிமார்களின் முன்னறிவிப்புகள் உண்மை என நிரூபணமாகி விடுகின்றன. எனவே மறுமை வாழ்க்கை தொடர்பான அவர்களின் சாட்சியங்கள் நம்பிக்கையாளர்களுக்கு போதுமானதாக இருக்க வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நபிமார்கள் தோன்றும்போது அவர்கள் நமக்கு நற்செய்திகளையும் வழங்குகின்றனர். சில விஷயங்களைக் குறித்து நம்மை எச்சரிக்கவும் செய்கின்றனர். அவர்கள் முன்னறிவிப்புகளும் செய்கின்றனர். அந்த முன்னறிவிப்புகள் எவ்வாறு முழுமையடைகின்றன என்பதை நாம் பார்க்கின்றோம். எனவே நபிமார்கள் கூறுகின்றவை அனைத்தும் உண்மையாக இருக்கின்றன என்பதை நமது அனுபவம் கூறுகின்றது. மரணத்திற்குப் பிறகு ஒரு வாழ்க்கை உள்ளது. அதுவே நிரந்தரமாகும். அல்லாஹ் இவ்வுலகில் நன்மை செய்தவர்களுக்கு நற்கூலி வழங்குகின்றான். மேலும் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படாதவர்களுக்கு அவன் தண்டனை வழங்குவான். இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட கடமைகளை ஆற்றாதவர்களுக்கும், இறை அடியார்களின் உரிமைகளை கருத்தில் கொள்ளாதவர்களுக்கும் அவன் தண்டனை வழங்குவான் என்றும் அந்த நபிமார்கள் நமக்கு கூறியுள்ளனர்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேலும் கூறினார்கள்: நீங்கள் இறைவன் மீது நம்பிக்கை கொண்டுள்ளீர்கள் என்றால் அவனும் உங்களுக்கு சில அடையாளங்களை காட்டுவான். ஏராளமான மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் தமது கனவுகளில் கண்டுள்ளனர். அல்லது மரணத்திற்குப் பிறகும் ஒரு வாழ்க்கை உள்ளது என்பதை அல்லாஹ் அவர்களுக்கு வேறொரு வழிமுறையின் மூலம் காட்டியுள்ளான்.

(நன்றி: அல்ஃபஸ்ல் பத்திரிகை இன்டர்நேஷனல் 15 ஜூன் 2021)


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 03 March 2022 Issue No. 9

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் குத்தாமுல் அஹ்மதிய்யா கேம்பியா தேசிய செயற்குழுவின் ஆன்லைன் சந்திப்பு

### குத்தாமுல் அஹ்முதிய்யா கேம்பியா தேசிய செயற்குழுவுடன் சந்திப்பு

மே 23, 2021 அன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்தாமுல் அஹ்மத்திய்யா கேம்பியாவின் தேசிய செயற்குழுவிற்கு ஆன்லைன் மூலம் சந்திக்கும் கண்ணியத்தை வழங்கினார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் (டில்ஃபோர்ட்) இஸ்லாமாபாத்திலுள்ள தமது அலுவலகத்திலிருந்து இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்கள். அதே நேரம் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் MTA International கேம்பியாவின் ஸ்டுடியோவிலிருந்து கலந்து கொண்டனர்.

மார்க்க கல்வி கற்றுக் கொடுக்கின்ற பொறுப்பு சுமத்தப்பட்டுள்ள முஹ்தமிம் தஃலீம் அவர்களிடம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: சில குறிப்பிட்ட மார்க்க புத்தகங்களை காதிம்கள் படிப்பதற்காக நிர்ணயிக்க வேண்டும்.

காதிம்களின் நல்லொழுக்க மற்றும் ஆன்மீக தர்பிய்யத்திற்கான பொறுப்பு சுமத்தப்பட்டுள்ள முஹ்தமிம் தர்பிய்யத் அவர்களிடம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: காதிம்கள் அனைவரும் தமது தொழுகைகளை பேணி வருகின்றார்கள். திருக்குர்ஆன் திலாவத் செய்கின்றார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை படிப்பதிலும், ஏனைய மார்க்க விவகாரங்களிலும் சரியாக உள்ளார்கள் என்ற விஷயத்தை உறுதி செய்வதற்காக அவர்களுக்கு குறிப்பிட்ட இலக்குகளை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: குறிப்பிட்ட மற்றும் சரியான புள்ளி விவரங்களை ஒன்றுகூட்டுவது தாக்கமிகு திட்டங்களை வகுப்பதற்கு அவசியமாகும். ஏனென்றால் அப்போது தான் காதிம்களின் அசல் நிலை குறித்து தெரிய வரும். பின்னர் குறிப்பிட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்பட முடியும். மேலும் பணிகளில் மேன்மையை உருவாக்க முடியும். புத்தம்புது தகவல்கள் இன்றி, உண்மைக்கு மாற்றமான இலக்குகளால் சரியான முறையில் ஒருவர் தனது நோக்கத்தை அடைகின்றாரா? இல்லையா? என்பதை அறிந்து கொள்ள முடியாது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உங்களிடத்தில் புள்ளி விவரங்கள் இல்லாத வரை, அசல் நிலவரம் என்ன? என்பது உங்களுக்கு தெரியாத வரை, நீங்கள் எங்கே நிற்கின்றீர்கள்? என்பது உங்களுக்குத் தெரியாத வரை, உங்களின் இலக்கு என்னவாக இருக்க வேண்டும்? என்பபை நீங்கள் அறிய முடியாது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: உங்களை நீங்கள் சுயமே நிலை நிறுத்த நேரிடும். வெளியிலிருந்து வந்து எவரும் உங்களை நிலை நிறுத்த முடியாது. நீங்கள் சுயமே உழைக்க வேண்டும். தர்பிய்யத் துறை செயல்மிக்கதாக ஆகி விட்டால் ஏனைய துறைகளும் செயல்மிக்கதாக ஆகி விடும். மேலும் நீங்கள் உங்களது காதிம்களிடம் தெளிவான மாற்றங்களை உணர்வீர்கள். அவர்கள் நமது அமைப்புடன் மேலும் இணைந்து விடுவார்கள். மேலும் உதவியாளர்களாகவும், ஒத்துழைப்பு வழங்குபவர்களாகவும் ஆகி விடுவார்கள். பள்ளிவாசலின் பக்கம் கவனம் செலுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள். அல்லாஹ்வுடன் தனிப்பட்ட தொடர்பை உருவாக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். தீய பழக்க வழக்கங்களிலிருந்து விலகி இருப்பவர்களாக இருப்பார்கள்.

மாணவர்களின் விவகாரத்திற்கான முஹ்தமிம் சாஹிப் அதாவது எவரிடம் மாணவர்கள் தொடர்பான விவகாரங்களின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவரிடம் காதிம்களின் கேரியர் திட்டம் தொடர்பாக அறிவுரை செய்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அதிகம் அதிகமாக மருத்துவம், அறிவியல் மற்றும் ஆராய்ச்சி போன்ற துறைகளில் காதிம்கள் செல்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்துங்கள் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். அப்போது சில மாணவர்கள் விவசாயம் மற்றும் கல்வித்துறையில் செல்கின்றார்கள் என்று மாணவர்களின் விவகாரத்திற்கான முஹ்தமிம் சாஹிப் கூறினார். அதற்கு கல்வி மற்றும் வகாலத் துறைகளைப் போன்று விவசாயமும் மிக நல்ல கட்டுரைதான் என்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

அறிக்கைகள் மற்றும் அதன் கருத்துக்களின் முக்கியத்துவம் பக்கம் விழிப்புணர்வு ஊட்டியவாறு குத்தாமுல் அஹ்முதிய்யா சதர் அவர்களிடம் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: மஜ்லிஸ்களிடமிருந்து வரக் கூடிய அறிக்கைகளை நிரந்தரமாக ஆய்வு செய்து வருவது அவசியமாகும். பின்னர் அவர்களுக்கு கடிதம் கிடைத்த தகவலையும், அறிக்கைகள் குறித்த கருத்துக்களையும் அனுப்புங்கள். தேசிய அளவிலுள்ள பொறுப்பாளர்களின் கடமை என்னவென்றால், அவர்கள் நிரந்தரமான மற்றும் தற்காலிக பொறுப்புகளை உள்ளூர் மஜ்லிஸின் குத்தாம்களுடன் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

கூட்டத்தின் இறுதியில் கலந்து கொண்டவர்களில் ஒருவர் சமூக ஊடகங்களை தப்லீக்கிற்காக எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: நீங்கள் சமூக ஊடகங்களை தப்லீக்கிற்காக சிறந்த முறையில் இவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும். அதாவது திருக்குர்ஆனின் வசனங்களின் வடிவில் சிறந்த ஆதாரங்களை பதிவிடுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களையும் பதிவிடுங்கள். பல்வேறு வகையான இயல்பு கொண்ட மக்களுக்கு பல்வேறு கேள்விகள் இருக்கும். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஒட்டுமொத்த உறுப்பினர்களும் பொறுமையை கைகொள்ள வேண்டும். சண்டை சச்சரவு அல்லது ஏச்சுப் பேச்சுக்களில் ஈடுபடக் கூடாது.

இது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஒருவேளை ஒருவர் மிகவும் மோசமாக பேசினால் அல்லது ஏசிப் பேசிக் கொண்டிருக்கின்றார் என்றால் பதில் நடவடிக்கையில் ஈடுபடாதீர்கள். அவர்கள் சிறந்த நல்லொழுக்கத்தை மேற்கொள்ளவில்லையென்றால் பின்னர் அதுபோன்ற நபர்களிடமிருந்து விலகிக் கொள்ளுங்கள். எச்சரிக்கையை மேற்கொள்ளுங்கள். நீங்கள் Facebook அல்லது ஏனைய சமூக ஊடகங்களில் தப்லீக் செய்ய விரும்புகின்றீர்கள் என்றால் நல்லொழுக்கங்களை முழுக்க முழுக்க கருத்தில் கொள்ளுங்கள். மேலும் அவர்களுக்கு திருக்குர்ஆன் போனையை எடுத்துக் கூறுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸ்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளை அவர்களுக்கு கூறுங்கள்.

கூட்டத்தின் வழக்கமான நடைமுறைக்குப் பிறகு குத்தாமுல் அஹ்மதிய்யா கேம்பியாவின் செயல்பாடுகளை உள்ளடக்கிய ஓர் ஒளிப்பதிவு காட்டப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொள்பவர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் சில மார்க்க விவகாரங்கள் மற்றும் தற்போதைய சூழலைப் பற்றி கேள்வி கேட்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

நான் எப்படி எனது நாட்டில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு தொண்டாற்ற முடியும்? என்று ஒரு காதிம் கேட்டார். எவ்வாறு ஒரு காதிம் சிறந்த வழிமுறையில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய முடியும்? என்ற

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad